தமிழ்நாடு மகளிர் மேம்பாட்டு


# முற்றம்

ஊரக வளர்ச்சி
மற்றும் ஊராட்சித் துறை

**விலை ரூ. 20/-**
**மலர்** 25
**இதழ்** 11
மார்ச் 2024

மகளிர் சுய உதவிக் குழுக்களுக்கான மாத இதழ்

## சுய உதவிக் குழுக்களுக்கு
## வங்கிக் கடன் இணைப்புகள் மற்றும் மதி எக்ஸ்பிரஸ்
## மின் வாகனங்கள் வழங்குதல்








எழுதப் படிக்க வாய்ப்புக் கிட்டாத மகளிர் கூட இன்று மகளிர் சுய உதவிக் குழுக்களில் இணைந்து வெற்றி பெற்ற தொழில் முனைவோர்களாக மாறியிருக்கிறார்கள்


முனைவர். **ப. செந்தில்குமார்,** இ.ஆ.ப.,
அரசு முதன்மைச் செயலாளர்,
ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித் துறை.

தலைமைச் செயலகம்,
சென்னை – 600 009


## அன்புள்ள சுய உதவிக் குழு சகோதரிகளே,

முற்றம் மாத இதழின் மூலம் உங்களுடன் எனது கருத்துகளைப் பகிர்ந்து கொள்வதில் பெருமகிழ்ச்சியடைகிறேன்.

“பெண்களின் சக்தி அளவிட முடியாதது. அதை முறையாகப் பயன்படுத்தி பொருளாதாரத்தில் தன்னிறைவு அடைந்துள்ளார்கள்” என்பதற்கு சுய உதவிக் குழு மகளிரான நீங்கள் முன்னுதாரணமாக இருக்கிறீர்கள். எழுதப் படிக்க வாய்ப்புக் கிட்டாத மகளிர் கூட இன்று மகளிர் சுய உதவிக் குழுக்களில் இணைந்து வெற்றி பெற்ற தொழில் முனைவோர்களாக மாறியிருக்கிறார்கள்.

“சிறு துளி பெரு வெள்ளம்” என்பதைப் போல் தாங்கள் சேமிக்கும் தொகையையும், தங்களுக்கு வழங்கப்படும் சுழல்நிதியையும் தங்களுக்குள்ளேயே குறைந்த வட்டிக்குக் கடனாகக் கொடுத்து, முறையாகக் கடன் திருப்பம் செய்கிறார்கள். இதனால் கந்துவட்டி தொல்லையில் இருந்து தப்பிப்பதுடன் குடும்பத்தின் பொருளாதாரத் தேவைகளையும் ஈடுசெய்து கொள்கிறார்கள்.

சுய உதவிக் குழுக்களின் பொருளாதார தேவைகளை நிறைவு செய்திடும் வகையில் இவ்வாண்டு 30 ஆயிரம் கோடி ரூபாய் வங்கிக் கடன் இணைப்பு வழங்க நிர்ணயிக்கப்பட்ட இலக்கினை விட அதிக அளவில் வங்கிக் கடன் இணைப்பு வழங்கிட நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன. மேலும் பல்வேறு பொருட்களின் உற்பத்தியில் ஈடுபடும் சுய உதவிக் குழுக்களின் தயாரிப்புப் பொருட்களுக்கு பல்வேறு வகையான சந்தை வாய்ப்புகளை ஏற்படுத்தித் தருவதுடன், நவீன காலத்திற்கு ஏற்ற வகையில் இணையதளம் வாயிலாகவும் விற்பனை செய்திட நடவடிக்கைகள் எடுக்கப்பட்டுள்ளன.

இத்தகைய நடவடிக்கைகளினால் பொருளாதார வளர்ச்சி பெற்று வரும் சுய உதவிக் குழுவினர் தங்களின் முன்னேற்றத்தை மட்டும் கருத்தில் கொள்ளாமல், சமூக வளர்ச்சியிலும் ஈடுபட்டு வருவது பாராட்டுக்குரியது.

இன்னும் சுய உதவிக் குழுக்களில் இணையாத மகளிரை இணைத்து மேலும் பல சுய உதவிக் குழுக்களை உருவாக்கும் பணியில் நீங்கள் ஈடுபட வேண்டும். பொருளாதார சுய சார்பு பெற்றவர்களாக நீங்கள் முன்னேற்றம் பெற வேண்டும் என்று அன்புடன் கேட்டுக் கொள்கிறேன்.

நன்றி... வணக்கம்.

அன்புடன்,

(ப. செந்தில்குமார்)



திருமதி. **ச. திவ்யதர்சினி,** இ.ஆ.ப.,
மேலாண்மை இயக்குநர்,
தமிழ்நாடு மகளிர் மேம்பாட்டு நிறுவனம்,
முதன்மை செயல் அலுவலர்,
தமிழ்நாடு மாநில ஊரக வாழ்வாதார இயக்கம்

**அன்புள்ள சகோதரிகளே,**

அனைத்துத் துறைகளிலும் சாதனை படைத்து வருபவர்கள் பெண்கள். ஒரு பெண் முன்னேற்றம் அடையும் போது அந்தப் பெண்ணின் குடும்பமும் சேர்ந்தே பயனடைகிறது. தடைகளைத் தகர்த்து தன்னலமற்று செயல்படும் வலிமை கொண்ட நமது சுய உதவிக் குழு பெண்களும் பல்வேறு சாதனைகளுக்கு உரியவர்களாக இருக்கின்றனர். ஒற்றுமை, விடா முயற்சி, அயராத உழைப்பு என தங்களின் பணிகளில் அர்ப்பணிப்புடன் செயல்படும் சுய உதவிக் குழு பெண்கள் சமத்துவத்தை உறுதி செய்யும் எதிர்காலத்தை நோக்கி சவால்களை வெற்றி கொண்டு பயணிக்கிறார்கள்.

பெண்களின் முன்னேற்றத்திற்காக நம் தமிழ்நாடு மகளிர் மேம்பாட்டு நிறுவனம் பல்வேறு நடவடிக்கைகளை மேற்கொண்டு வருகிறது. அதன் அயராத செயல்பாட்டின் விளைவாக இன்று சுய உதவிக் குழு பெண்கள் பல்வேறு பொருட்களை தரமான முறையில் தயாரித்து விற்பனை செய்வது, நிலங்களை குத்தகைக்கு எடுத்து இயற்கை விவசாயம் செய்வது, விவசாயத்திற்கு பயன்படும் நவீன கருவிகளை வாடகைக்கு விடுவது என பல்வேறு தளங்களிலும் உயிர்ப்புடன் செயல்பட்டு வருகின்றனர்.

நமது அன்னை தெரசா மகளிர் வளாகத்தில் நடைபெறும் சுய உதவிக் குழுக்கள் தயாரிக்கும் பொருட்களின் விற்பனை கண்காட்சிகளுக்கும், மதி அனுபவ அங்காடிக்கும் மக்கள் தரும் பெரும் ஆதரவு ஒரு பக்கம்; வாராக்கடன்கள் நிறைந்த வங்கித் தொழிலில், பெற்ற கடனை முன்னதாகவே முழுமையாகச் செலுத்தும் சுய உதவிக் குழு மகளிருக்கு வங்கியாளர்கள் தரும் பாராட்டு மறுபக்கம் என வெற்றிக் கதைகளின் எண்ணிக்கை தொடர்கிறது.

தன் வீடு, தன் குடும்பம், தன் வளர்ச்சி என குறுகிய வட்டத்தில் செயல்படாமல், பிறர் நலன் நாடும் தன்னலமற்றவர்களாக நம் சுய உதவிக் குழு மகளிர் உள்ளனர் என்பது பெருமையாக உள்ளது. உங்களின் முன்னேற்றத்திற்குத் தேவையான அனைத்து உதவிகளையும் செய்து வரும் தமிழ்நாடு மகளிர் மேம்பாட்டு நிறுவனத்தின் அங்கமாக செயல்படும் ஊரக மற்றும் நகர்ப்புர வாழ்வாதார இயக்கங்கள், தீனதயாள் உபாத்தியாய கிராமப்புற பயிற்சித் திட்டம் மற்றும் வாழ்ந்து காட்டுவோம் திட்டம் போன்றவை தொடர்ந்து உங்களுக்குத் தேவையான உதவிகளை செய்ய தயாராக உள்ளன என்பதை தெரிவித்துக் கொள்கிறேன்.

உங்களின் செயல்பாடுகளுக்கு தடைகள் வரலாம். அவற்றை நீங்கள் புறந்தள்ளி விட்டு கடமையை மட்டுமே கண்ணாகக் கொண்டு, உங்களின் அனைத்து செயல்பாடுகளும் இருக்க வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன்.

நன்றி. வணக்கம்

மீண்டும் சந்திப்போம்...

அன்புடன்,

(ச. திவ்யதர்சினி)



திருமதி. **ஸ்ரேயா பி சிங்,** இ.ஆ.ப.,
செயல் இயக்குநர்,
தமிழ்நாடு மகளிர் மேம்பாட்டு நிறுவனம்

**அன்புள்ள சுய உதவிக் குழு சகோதரிகளே,**

மாதந்தோறும் முற்றம் இதழின் வாயிலாக உங்களை சந்தித்து உங்களுடன் எனது கருத்துக்களைப் பகிர்ந்து கொள்வதில் மகிழ்ச்சி

இன்று அனைத்துத் துறைகளிலும், ஆண்களுக்கு நிகராக மட்டுமல்லாமல் அதற்கும் மேலாகவும் தங்களின் பங்களிப்பை பெண்கள் செலுத்தி வருகிறார்கள். கைத்தொழில் முதல் பெரும் இயந்திரத் தொழில் வரையிலும், கலைப்பணி முதல் விஞ்ஞானத் தொழில் வரையிலும் பெண்களின் பங்களிப்பு அளவிடற்கரியது. வீட்டை சிறப்புற நிர்வகிக்கும் பெண்கள் இன்று நாட்டையும் நிர்வாகம் செய்கிறார்கள்.

வெளியுலகம் அறியாமல் வீட்டிலேயே அடைபட்டு, கல்வி அறிவு மறுக்கப்பட்டு தங்களின் அத்தியாவசியத் தேவைகளுக்குக் கூட பிறரின் தயவை எதிர்நோக்கியிருந்த பெண்களை, இன்று தொழில் முனைவோராக உருமாற்றிய பெருமை நமது சுய உதவிக் குழு இயக்கத்தையே சாரும். சின்னஞ்சிறு இயக்கமாகத் தோன்றிய மகளிர் சுய உதவிக் குழு இயக்கம் இன்று அசுர வளர்ச்சி பெற்றுள்ளது என்பதையும், இவ்வளர்ச்சிக்கு காரணம் நீங்கள்தான் என்பதையும் யாராலும் மறுக்க முடியாது.

ஒற்றுமைக்கும், அயராத உழைப்பிற்கும், தடைகளைத் தகர்த்து முன்னேறும் செயல் வேகத்திற்கும், தோல்விகளை வெற்றிகளாக்கும் மன வலிமைக்கும் உரியவர்கள் என்ற பெருமை பெற்றவர்கள் நீங்கள். மற்றவர்களுக்கு வழிகாட்டியாக இருக்கும் உங்களுக்கு தமிழ்நாடு மகளிர் மேம்பாட்டு நிறுவனம் என்றும் உந்து சக்தியாக இருக்கும்.

விரைவில் கோடைக்காலம் துவங்கவுள்ளது. பூமத்திய ரேகைக்கு அருகில் இருக்கும் நமது நாட்டில் ஏறத்தாழ ஆறு மாதங்களுக்கு கோடை வெயிலின் தாக்கம் இருக்கும். கோடைக்காலம் என்றாலே தண்ணீரின் தேவையும், பல்வேறு நோய்களின் தாக்குதலும் கூடுதலாக இருக்கும் என்பதால், தண்ணீரை சிக்கனமாகப் பயன்படுத்துவதிலும், நோய்களின் தாக்குதலில் இருந்து உடல் நலத்தைக் காக்கும் நடவடிக்கைகளிலும் சுய உதவிக் குழுவினரான நீங்கள் ஈடுபட வேண்டும்.

மகளிர் தம் வாழ்வு மேலும் மேலும் சிறப்படைய, உங்களின் வெற்றிப் பயணத்திற்கு உறுதுணையாக தமிழ்நாடு மகளிர் மேம்பாட்டு நிறுவனம் என்றும் அயராது செயலாற்றி வரும் என்றும், மகளிர் சுய உதவிக் குழுக்கள் மேலும் சிறப்பாக செயலாற்றி, சாதனைகள் பல படைக்க வேண்டும் என்றும் வாழ்த்துகிறேன்!

நன்றி... வணக்கம்.

அன்புடன்,
ஸ்ரேயா
(ஸ்ரேயா பி சிங்)

கவிதை, உடல் நல குறிப்புகள், சிறப்புக் கட்டுரைகள், சுய உதவி குழுக்கள் சம்பந்தப்பட்ட நிகழ்ச்சிகள் போன்றவை குறித்த விபரங்களை சுய உதவிக் குழு உறுப்பினர்கள் தக்க புகைப்படத்துடன் அனுப்பினால் அவைகளில் தகுதி வாய்ந்தவைகள் முற்றம் இதழில் பிரசுரிக்கப்படும். சுய உதவி குழுக்களின் வெற்றிக் கதைகள், குழுவின் செயல்பாடுகள் போன்றவற்றையும் புகைப்படத்துடன் அனுப்பினால், அவைகளும் முற்றம் இதழில் பிரசுரிக்கப்படும். முற்றம் இதழ் குறித்த தங்களின் விமர்சனங்களும், ஆலோசனைகளும் வரவேற்கப்படுகின்றன.


மின்னஞ்சல் :
wdcmutram@yahoo.com
wdcmutram@gmail.com


## குறளும் – பொருளும்

தொடங்கற்க எவ்வினையும் எள்ளற்க முற்றும்
இடங்கண்ட பின்னல் லது

– (குறள்: 491)

ஈடுபடும் செயல் ஒன்றும் பெரிதல்ல என இகழ்ச்சியாகக் கருதாமல், முற்றிலும் சரியான இடத்தைத் தேர்ந்தெடுத்து அச்செயலில் இறங்க வேண்டும்.


tncdwH
Tncdw State
www.Tncdw.org
Tncdwofficial


“மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் ஆணைக்கிணங்க, தமிழ்நாடு மகளிர் மேம்பாட்டு நிறுவனத்தின் சிறப்பான செயல்பாட்டிற்காக மாண்புமிகு ஊரக வளர்ச்சித் துறை அமைச்சர் அவர்கள் மேற்கொண்டு வரும் ஆய்வுகள், ஊரக வளர்ச்சித் துறை முதன்மைச் செயலாளர், தமிழ்நாடு மகளிர் மேம்பாட்டு நிறுவனத்தின் மேலாண்மை இயக்குநர், செயல் இயக்குநர் ஆகியோர்களின் செயல்பாடுகள் மற்றும் மகளிர் சுய உதவிக் குழுக்களுக்கு வழங்கப்படும் நலத்திட்ட உதவிகள் குறித்த விபரங்களை தமிழ்நாடு மாநில ஊரக மற்றும் நகர்ப்புர வாழ்வாதார இயக்கத்தின் டுவிட்டர், இன்ஸ்ட்ராகிராம் மற்றும் முகநூல் பக்கங்களை பின்தொடருங்கள்..”

# உள்ளே...




7 மகளிர் சுய உதவிக் குழுக்களுக்கு நலத்திட்ட உதவிகள் வழங்குதல்





12 இயற்கை சந்தை





8 மதி எக்ஸ்பிரஸ் மின் வாகனங்கள் வழங்குதல்





16 பயன்தரும் அறிவிப்புகள்





11 பள்ளிக்கு நிதி உதவி





25 வரதட்சணை தடை சட்டம் 1961


சுய உதவிக் குழு மகளிரின் உற்ற தோழியான முற்றம் இதழிற்கு சந்தாதாரர்களை சேர்த்திட அனைத்து மாவட்ட மகளிர் திட்ட செயலாக்க அலகுகளுக்கும் இலக்கு நிர்ணயிக்கப்பட்டிருந்தது. அதன் அடிப்படையில் முற்றம் இதழுக்கு சந்தா சேர்ப்பதற்கு நடவடிக்கை மேற்கொண்டு, சந்தாக்களை சேர்த்த அனைத்து மாவட்டங்களின் மகளிர் திட்ட செயலாக்க அலகுகளுக்கும் முற்றம் இதழ் நன்றியையும், பாராட்டுகளையும் தெரிவித்துக் கொள்கிறது.

தொடர்ந்து இவ்வாண்டும் முற்றம் இதழிற்கு சந்தா சேர்க்க நிர்ணயிக்கப்பட்டிருக்கும் இலக்கை நிறைவு செய்திட அனைத்து மாவட்டங்களின் மகளிர் திட்ட செயலாக்க அலகுகளும் நடவடிக்கை மேற்கொள்ள முற்றம் இதழின் சார்பாக கேட்டுக் கொள்கிறோம்.

முற்றம் இதழிற்கு சந்தாதாரர்களை சேர்த்து வரும் அனைத்து மாவட்டங்களின் ஊரக வாழ்வாதார இயக்கத்தின் திட்ட இயக்குநர்கள், அனைத்து மாவட்டங்களிலும் செயல்படும் மகளிர் திட்ட செயலாக்க அலகுகள், உதவித் திட்ட அலுவலர்கள், வட்டார வளர்ச்சி அலுவலர்கள், உதவி வட்டார வளர்ச்சி அலுவலர்கள், ஊராட்சி அளவிலான கூட்டமைப்புகள், சுய உதவி குழுக்கள், கிராம வறுமை ஒழிப்புச் சங்கங்கள் உட்பட அனைவருக்கும் முற்றம் இதழ் சார்பாக நன்றியையும், பாராட்டுதல் களையும் தெரிவித்துக் கொள்கிறோம்.

– ஆசிரியர், முற்றம் மாத இதழ்

தமிழ்நாடு மகளிர் மேம்பாட்டு
# முற்றம்
விலை ரூ. 20/– • மலர் 25 • இதழ் 11 • மார்ச் 2024

கௌரவ ஆசிரியர்கள்
திருமதி. **ச. திவ்யதர்சினி,** இ.ஆ.ப.,
மேலாண்மை இயக்குநர்,
தமிழ்நாடு மகளிர் மேம்பாட்டு நிறுவனம்,
முதன்மை செயல் அலுவலர்,
தமிழ்நாடு மாநில ஊரக வாழ்வாதார இயக்கம்
தலைமை செயல் அலுவலர்,
வாழ்ந்து காட்டுவோம் திட்டம்

திருமதி. **ஸ்ரேயா பி சிங்,** இ.ஆ.ப.,
செயல் இயக்குநர்,
தமிழ்நாடு மகளிர் மேம்பாட்டு நிறுவனம்

பதிப்பாளர் மற்றும் ஆசிரியர்
திரு. **எஸ். சின்னப்பன்,** செயலர், முற்றம்

ஆசிரியர் குழு
திருமதி. **க. முத்துமீனாள்,** கூடுதல் இயக்குநர், TNCDW
திருமதி. **எஸ். கவிதா,** கூடுதல் இயக்குநர், TNCDW
திரு. **நா. அருள்ஜோதி அரசன்,** கூடுதல் இயக்குநர், VKP
திரு. **பி. மந்திராச்சலம்,** கூடுதல் இயக்குநர், TNCDW
திரு. **ஆர். சங்கர்,** கூடுதல் இயக்குநர், TNCDW
திரு. **வி. பிச்சை,** கூடுதல் இயக்குநர், NULM

தமிழ்நாடு மகளிர் மேம்பாட்டு நிறுவனம்
நிர்வாக ஆசிரியர்
திருமதி. **பி. எஸ். விஜயலெஷ்மி** பொது மேலாளர்,

நிதி நிர்வாகம்
திரு. **ச. இராஜேந்திரன்,** நிதி ஆலோசகர்,

பொறுப்பாசிரியர் மற்றும் மேலாளர்
திரு. **வா. ராகுலன்,** செய்தி மக்கள் தொடர்பு அலுவலர்,

துணை ஆசிரியர் : **ஏ. கண்ணன்**
பிழை திருத்துபவர் : **எஸ். எஸ். ரவிச்சந்திரன்**
கணினி வடிவமைப்பு : **பி.ஆர்.இ குழுமம்**

தொடர்பு கொள்ள வேண்டிய முகவரி :
**'முற்றம்'**
தமிழ்நாடு மகளிர் மேம்பாட்டு நிறுவனம்,
அன்னை தெரசா மகளிர் வளாகம்,
வள்ளுவர் கோட்டம் நெடுஞ்சாலை,
நுங்கம்பாக்கம், சென்னை – 600 034.
தொலைபேசி : 044 4211 9497, 044 2817 3412 / 3413

முற்றம் இதழ் தமிழ்நாடு மகளிர் மேம்பாட்டு நிறுவனத்தின் ஆதரவுடன் வெளியிடப்படுகிறது.

# மகளிர் தினம் ஒரு கொண்டாட்டமா…?



**அன்புள்ள வாசகர்களுக்கு,**

ஒவ்வொரு ஆண்டும் மார்ச் மாதம் வந்தாலே இரண்டு முக்கிய நிகழ்வுகள் நினைவிற்கு வரும். ஒன்று கல்வி நிறுவனங்களில் மாணவர்களுக்கான ஆண்டு தேர்வு, குறிப்பாக இறுதி ஆண்டு மாணவர்கள் பரபரப்பாக இயங்கும் நேரமிது. காரணம், இந்த தேர்வு அவர்களின் வாழ்க்கையை நிர்ணயிக்க கூடிய ஒன்றாகும்.

மற்றொரு நிகழ்வு அகில உலக மகளிர் தினம். இயற்கையின் படைப்பில் ஆணும் பெண்ணும் சமமே. ஆணுக்கும் பெண்ணுக்கும் இடையே இயற்கையிலேயே சில வேறுபாடுகள் இருப்பது அனைவரும் அறிந்ததே. ஆனால், ஆணுக்கும் பெண்ணுக்கும் இடையே சமுதாயத்தால் செயற்கையாக பல பாகுபாடுகள் உருவாக்கப்பட்டு, ஆண்கள் ஆதிக்கம் மிகுந்தவர்களாக கோலோச்சி கொண்டு வருகின்றனர் என்பதும் உண்மையே. இந்த பாகுபாடுகளால், துன்பங்களையும் வேதனைகளையும் அனுபவித்து வரும் பெண்கள் காலப்போக்கில் பொறுமை யை இழந்து வெகுண்டெழ ஆரம்பித்துள்ளனர். பெண்களின் உரிமைக்காகவும் ஆண் ஆதிக்கத்திற்கு எதிராகவும் போராட்டங்களை முன்னெடுத்து வருகின்றனர். இதன் விளைவாக உருவானதுதான் அகில உலக மகளிர் தினம்.

தற்போது, அரசுகள் பெண்களுக்கு தேவையான சாதகமான பல கொள்கைகளை வகுத்தும், திட்டங்களை தீட்டியும் செயல் படுத்தி வருகின்றன. ஆண்களுக்கு நிகராக பெண்கள் உயர்கல்வி மற்றும் தொழில்நுட்ப கல்வி பயில ஆரம்பித்து விட்டனர்.

அனைத்துத் துறைகளிலும் ஆண்களுக்கு நிகராக எண்ணிக்கையிலும், நிர்வாகத்திலும் திறமை மிக்கவர்களாக பணியாற்றி வருகின்றனர். தேர்தல்களில் போட்டியிட்டு தலைவர்களாகவும், சட்டமன்ற மற்றும் பாராளுமன்ற உறுப்பினர்களாகவும், உள்ளாட்சி அமைப்புகளின் பிரதிநிதி களாகவும் செயல்பட்டு தங்களின் தலைமை பண்பை நிரூபித்து வருகின்றனர். ஆண் பெண் நிகர்நிலை பற்றி விழிப்புணர்வை ஏற்படுத்துவதற்கான பல்வேறு நிகழ்வுகள் ஆங்காங்கே தொடர்ந்து நடைபெற்று வந்தாலும், சமுதாயத்தில் எத்தனை பேர்களுக்கு மன நிலையில் மாற்றம் ஏற்பட்டிருக்கின்றது என்பது கேள்வி குறியாகவே உள்ளது. கலாச்சாரம் என்ற பெயரில் பெண் அடிமையானது சமூகமயமாக்கப்பட்டு, அவைகள் அநீதி என அறியாமல் உள்வாங்கி கொண்ட பெண்கள் அதிலிருந்து விடுபடுவார்களா?.

எனவே, மகளிர் தினம் என்பது ஒரு கொண்டாட்டம் மட்டுமே அல்ல, ஆண் பெண் சமத்துவத்தை உருவாக்கக் கூடிய ஒரு சமூக விழிப்புணர்ச்சியாகும்.

இப்படிக்கு,

(எஸ். சின்னப்பன்)
ஆசிரியர், முற்றம்




## மகளிர் சுய உதவிக் குழுக்களுக்கு நலத்திட்ட உதவிகள் வழங்குதல்

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் திரு. மு.க. ஸ்டாலின் அவர்கள் 16.02.2024 அன்று சென்னை, கலைவாணர் அரங்கத்தில் முதல்வரின் முகவரி துறை சார்பில் நடைபெற்ற நிகழ்ச்சியில், "மக்களுடன் முதல்வர்" திட்டத்தில் மாநிலம் முழுவதும் நடத்தப்பட்ட 2058 முகாம்களில், 3.50 இலட்சம் மனுக்களுக்கு தீர்வு காணப்பட்டு, இத்திட்டத்தின் கீழ், மகளிர் சுய உதவிக் குழுக்களுக்கு 60 இலட்சம் ரூபாய்க்கான வங்கிக் கடனுதவிகளை வழங்கினார். இந்த நிகழ்ச்சியில், மாண்புமிகு இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத் துறை அமைச்சர் திரு. உதயநிதி ஸ்டாலின், மாண்புமிகு மீன்வளம் - மீனவர் நலத்துறை மற்றும் கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர் திரு. அனிதா ஆர். ராதாகிருஷ்ணன், மாண்புமிகு மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் திரு. மா. சுப்பிரமணியன், மாண்புமிகு இந்து சமயம் மற்றும் அறநிலையத்துறை அமைச்சர் திரு. பி.கே. சேகர்பாபு, பெருநகர சென்னை மாநகராட்சி மேயர் திருமதி ஆர். பிரியா, நாடாளுமன்ற உறுப்பினர்கள் திரு. தயாநிதி மாறன், டாக்டர் கலாநிதி வீராசாமி, சட்டமன்ற உறுப்பினர்கள், துணை மேயர் திரு. மு. மகேஷ் குமார், தலைமைச் செயலாளர் திரு. சிவ் தாஸ் மீனா, இ.ஆ.ப., பெருநகர சென்னை மாநகராட்சி ஆணையர் / கூடுதல் தலைமைச் செயலாளர் மரு.ஜெ.ராதாகிருஷ்ணன், இ.ஆ.ப., முதல்வரின் முகவரி துறை சிறப்பு அலுவலர் திருமதி ஷில்பா பிரபாகர் சதீஷ், இ.ஆ.ப., மற்றும் அரசு உயர் அலுவலர்கள் கலந்து கொண்டனர்.

## 2024-2025ஆம் ஆண்டிற்கான நிதிநிலை அறிக்கை தாக்கல்

19.02.2024 அன்று தமிழ்நாடு சட்டமன்றப் பேரவையில் தமிழ்நாடு அரசின் 2024-2025ஆம் ஆண்டிற்கான நிதிநிலை அறிக்கையை தாக்கல் செய்வதற்கு முன்பாக, மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் திரு. மு.க. ஸ்டாலின் அவர்களை, மாண்புமிகு நிதி மற்றும் மனிதவள மேலாண்மைத் துறை அமைச்சர் திரு. தங்கம் தென்னரசு அவர்கள் சந்தித்து வாழ்த்து பெற்று, பேரவைக்குள் சென்றார்.






மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் திரு. மு.க. ஸ்டாலின் அவர்களை, 20.02.2024 அன்று தலைமைச் செயலகத்தில், 2024-2025ஆம் ஆண்டிற்கான வேளாண்மை மற்றும் உழவர் நலத்துறையின் நிதிநிலை அறிக்கையை தமிழ்நாடு சட்டமன்றப் பேரவையில் தாக்கல் செய்வதற்கு முன்பாக, மாண்புமிகு வேளாண்மை மற்றும் உழவர் நலத்துறை அமைச்சர் திரு. எம்.ஆர்.கே. பன்னீர் செல்வம் அவர்கள் சந்தித்து வாழ்த்து பெற்றார்.




## மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் வழிகாட்டுதலின்படி, சுய உதவிக் குழுக்களுக்கு வங்கிக் கடன் இணைப்புகள் மற்றும், மதி எக்ஸ்பிரஸ் மின் வாகனங்கள் வழங்குதல், புதிய திட்டப் பணிகளுக்கு அடிக்கல் நாட்டுதல், முடிவுற்ற திட்டப் பணிகளை திறந்து வைத்தல் மற்றும் அரசு நலத்திட்ட உதவிகள் வழங்கும் விழா

மாண்புமிகு இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத் துறை அமைச்சர் திரு. உதயநிதி ஸ்டாலின் அவர்கள், 08.02.2024 அன்று ஈரோடு மாவட்டத்தில் நடைபெற்ற அரசு நிகழ்ச்சியில் தமிழ்நாடு முழுவதும் செயல்படும் 37,305 சுய உதவிக் குழுக்களைச் சேர்ந்த 3,00,583 உறுப்பினர்கள் பயன் பெறும் வகையில் 2504 கோடி ரூபாய் மதிப்பிலான வங்கிக் கடன் இணைப்புகளையும், 3.20 கோடி ரூபாய் மதிப்பிலான 100 மதி எக்ஸ்பிரஸ் மின் வாகனங்களையும் வழங்கி, புதிய திட்டப் பணிகளுக்கு அடிக்கல் நாட்டி, முடிவுற்ற திட்டப் பணிகளை திறந்து வைத்து, அரசு நலத்திட்ட உதவிகளை வழங்கினார்.

முன்னாள் முதலமைச்சர் முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களால் துவக்கப்பட்ட மகளிர் சுய உதவிக் குழு இயக்கம் இன்று சுய உதவிக் குழு பெண்களின் பொருளாதார வளர்ச்சிக்கு அடித்தளமாக அமைந்துள்ளது. மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் ஆற்றல்மிகு திட்டங்களின் காரணமாக இன்று நம் தாய்த் தமிழகம் அனைத்துத் துறைகளிலும் முன்னிலை பெற்று சாதனை படைத்து வருகிறது.

மகளிர் சுய உதவிக் குழு இயக்கத்தின் வளர்ச்சிக்கு மேலும் ஊக்கம் அளிக்கும் வகையில் 2021ஆம் ஆண்டு ஆட்சிப் பொறுப்பேற்றவுடன், மகளிர் சுய உதவிக் குழுவினருக்கு கூட்டுறவு சங்கங்கள் மூலம் வழங்கப்பட்ட கடன் தள்ளுபடி, மகளிர் சுய உதவிக் குழுவினருக்கு வங்கிக் கடன் இணைப்பு போன்ற திட்டங்களை மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் தலைமையிலான அரசு முனைப்புடன் செயல்படுத்தி வருகிறது.

கிராமப்புற சுய உதவிக் குழுக்கள் தயாரிக்கும் பொருட்களை நகரப் பகுதிகளில் விற்பனை செய்திட ஏதுவாக அனைத்து மாவட்டங்களிலும் அமைக்கப்பட்டிருந்த 'பூமாலை வணிக வளாகங்களைப் புதுப்பித்து, மீண்டும்



பயன்பாட்டிற்குக் கொண்டு வந்தது, முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களின் பிறந்த நாளினை "சுய உதவிக் குழுக்கள் தினமாக" அறிவித்தது, சிறப்பாக செயல்படும் சுய உதவிக் குழுக்கள் மற்றும் கூட்டமைப்புகளுக்கு மணிமேகலை விருதுகள், சுய உதவிக் குழுக்களுக்கு வங்கிக் கடன் இணைப்புகள் வழங்கிடும் வங்கிகளுக்கு விருதுகள் என சுய உதவிக் குழுக்களுக்கு ஊக்கம் தரும் நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.



அதன் தொடர்ச்சியாக, 08.02.2024 அன்று ஈரோடு மாவட்டத்தில் நடைபெற்ற நிகழ்ச்சியில், மாண்புமிகு இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத் துறை அமைச்சர் அவர்கள் ஈரோட்டு மாவட்டத்தில் செயல்படும் 2,337 சுய உதவிக் குழுக்களுக்கு 100.36 கோடி ரூபாய் மதிப்பிலான வங்கிக் கடன் இணைப்புகளையும், ஊரகப் பகுதிகளில் உள்ள மகளிர் சுய உதவிக் குழுக்கள் தங்களது உற்பத்திப் பொருட்கள் மற்றும் விளைபொருட்களை பல்வேறு இடங்களுக்கு கொண்டு சென்று விற்பனை செய்வதில் உள்ள சிரமங்களைப் போக்க வேண்டும் என்பதைக் கருத்தில் கொண்டு, மகளிர் சுய உதவிக் குழுக்களுக்கு மதி எக்ஸ்பிரஸ் மின் வாகனங்கள் மற்றும் நலத் திட்ட உதவிகளை வழங்கி சிறப்பித்தார்.



இந்நிகழ்வைத் தொடந்து, அனைத்து மாவட்டங்களிலும், மாண்புமிகு அமைச்சர் பெருமக்கள், நாடாளுமன்ற சட்டமன்ற உறுப்பினர்கள், மாவட்ட ஆட்சித் தலைவர்கள், சுய உதவிக் குழுக்களுக்கு வங்கிக் கடன் இணைப்புகள், மதி எக்ஸ்பிரஸ் மின் வாகனங்கள் மற்றும் நலத் திட்ட உதவிகளை வழங்கினர்.



இந்நிகழ்ச்சியில் மாண்புமிகு வீட்டு வசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சித் துறை, மதுவிலக்கு, ஆயத்தீர்வைத்துறை அமைச்சர் திரு. சு. முத்துசாமி, மாநிலங்களவை உறுப்பினர் திரு. அந்தியூர் ப. செல்வராஜ், ஈரோடு கிழக்கு சட்டமன்ற உறுப்பினர் திரு. ஈ.வி.கே.எஸ். இளங்கோவன், அந்தியூர் சட்டமன்ற உறுப்பினர் திரு. ஏ.ஜி. வெங்கடாசலம், ஈரோடு மாநகராட்சி மேயர் திருமதி சு. நாகரத்தினம், ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித் துறை அரசு முதன்மை செயலாளர் முனைவர் ப. செந்தில்குமார், இ.ஆ.ப., தமிழ்நாடு மகளிர் மேம்பாட்டு நிறுவனத்தின் மேலாண்மை இயக்குநர் திருமதி ச. திவ்யதர்சினி, இ.ஆ.ப., செயல் இயக்குநர் திருமதி ஸ்ரேயா பி சிங், இ.ஆ.ப., ஈரோடு மாவட்ட ஆட்சித் தலைவர் திரு. ராஜகோபால் சுன்கரா, இ.ஆ.ப., மற்றும் அரசு உயர் அலுவலர்கள், உள்ளாட்சி அமைப்புகளின் பிரதிநிதிகள் கலந்து கொண்டனர்.







கடலூர்

## மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் வழிகாட்டுதலின்படி, சுய உதவிக் குழுக்களுக்கு வங்கிக் கடன் இணைப்புகள், மதி எக்ஸ்பிரஸ் மின் வாகனங்கள் மற்றும் நலத் திட்ட உதவிகள் வழங்கும் விழா

தமிழ்நாடு மகளிர் மேம்பாட்டு நிறுவனத்தின் வழிகாட்டுதலில் செயல்படும் சுய உதவிக் குழுக்களின் பொருளாதாரத் தேவைகளை நிறைவு செய்திடவும், அவர்கள் மேற்கொள்ளும் தொழில் நடவடிக்கைகளுக்கான முதலீட்டிற்காகவும் வங்கிக் கடன் இணைப்புகள் பெற்றுத் தரப்படுகின்றன. மேலும் சுய உதவிக் குழுக்கள் தயாரிக்கும் பொருட்களை விற்பனை செய்திட பல்வேறு நடவடிக்கைகளை மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. அதன் ஒரு பகுதியாக ஊரகப் பகுதிகளில் உள்ள மகளிர் சுய உதவிக் குழுக்கள் தங்களது உற்பத்திப் பொருட்கள் மற்றும் விளைபொருட்களை பல்வேறு இடங்களுக்கு கொண்டு சென்று விற்பனை செய்வதில் உள்ள சிரமங்களைப் போக்க வேண்டும் என்பதைக் கருத்தில் கொண்டு, மகளிர் சுய உதவிக் குழுக்களுக்கு மதி எக்ஸ்பிரஸ் மின் வாகனங்கள் வழங்கப்படும் என்று மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் வழிகாட்டுதலில் மாண்புமிகு இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத் துறை அமைச்சர் அவர்கள் அறிவித்திருந்தார்.


சென்னை

அதன்படி, மாண்புமிகு இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத் துறை அமைச்சர் திரு. உதயநிதி ஸ்டாலின் அவர்கள் 08.02.2024 அன்று ஈரோடு மாவட்டத்தில் நடைபெற்ற அரசு நிகழ்ச்சியில் தமிழ்நாடு முழுவதும் செயல்படும் 37,305 சுய உதவிக் குழுக்களைச் சேர்ந்த 3,00,583 உறுப்பினர்கள் பயன் பெறும் வகையில் 2504 கோடி ரூபாய் மதிப்பிலான வங்கிக் கடன் இணைப்புகளையும், 3.20 கோடி ரூபாய் மதிப்பிலான 100 மதி எக்ஸ்பிரஸ் மின் வாகனங்களையும் வழங்கினார்.

இந்நிகழ்வைத் தொடர்ந்து, அனைத்து மாவட்டங்களிலும், மாண்புமிகு அமைச்சர் பெருமக்கள், நாடாளுமன்ற சட்டமன்ற உறுப்பினர்கள், மாவட்ட ஆட்சித் தலைவர்கள், சுய உதவிக் குழுக்களுக்கு வங்கிக் கடன் இணைப்புகள், மதி எக்ஸ்பிரஸ் மின் வாகனங்கள் மற்றும் நலத் திட்ட உதவிகளை வழங்கினர்.


திருநெல்வேலி



புதுக்கோட்டை



நீலகிரி




பெரம்பலூர்




விழுப்புரம்




திருவண்ணாமலை




தென்காசி

# பள்ளிக்கு நிதி உதவி



பெரம்பலூர் மாவட்டம், பெரம்பலூர் வட்டாரம், அம்மாபாளையம் கிராமத்தில் உள்ள அரசினர் மேல்நிலைப் பள்ளியின் ஆண்டு விழா 09.02.2024 அன்று நடைபெற்றது. இந்த விழாவில் கலந்து கொண்ட அம்மாபாளையம் களஞ்சியம் மகளிர் சுய உதவிக் குழுவின் உறுப்பினர்கள் சார்பில் குழுவின் நிதியிலிருந்து, பள்ளி மாணவர்களுக்கு சுகாதாரமான குடிநீர் கிடைப்பதற்காக அமைக்கப்பட்டுள்ள RO இயந்திரத்தினை பழுது நீக்கி பராமரிப்பதற்காக ரூபாய் 25,000/- வழங்கப்பட்டது.

# தமிழ்நாடு மகளிர் மேம்பாட்டு நிறுவனத்தின் சார்பில் சுய உதவிக் குழுக்கள் தயாரிக்கும் பொருட்களின்

# இயற்கை சந்தை

தமிழ்நாடு மகளிர் மேம்பாட்டு நிறுவனத்தின் வழிகாட்டுதலில் செயல்படும் மகளிர் சுய உதவி குழுவினரால் தயாரிக்கப்படும் பொருட்களை கிராம அங்காடிகள், கல்லூரி சந்தைகள், வட்டார, மாவட்ட, மாநில அளவிலான கண்காட்சிகள் மற்றும் தேசிய அளவில் சாராஸ் கண்காட்சிகள் வாயிலாக விற்பனை செய்வதற்கு ஏதுவாக பல்வேறு விற்பனை கண்காட்சிகள் நடத்தப்பட்டு வருகிறது. அதன் மூலம் ஏராளமான மகளிர் சுய உதவி குழுவினரால் உற்பத்தி செய்யப்படும் பொருட்கள் நேரடியாக விற்பனை செய்யப்படுகிறது. இதன் மூலம் மகளிர் சுய உதவி குழுவினருக்கு உரிய விலை கிடைப்பதோடு, வாடிக்கையாளர்களும் தரமான பொருட்களை நியாயமான விலையில் பெற முடிகிறது.

அதன் ஒரு பகுதியாக சென்னை, நுங்கம்பாக்கம், அன்னை தெரசா மகளிர் வளாகத்தில் தமிழ்நாடு மகளிர் மேம்பாட்டு நிறுவனத்தின் சார்பில் செயல்படும் மகளிர் சுய உதவிக் குழுக்கள் இயற்கை முறையில் உற்பத்தி செய்யும் பொருட்களின் இயற்கை வார சந்தை மாதந்தோறும் நடைபெற்று வருகிறது.

மாதந்தோறும் முதல் மற்றும் மூன்றாம் வார சனிக்கிழமை மற்றும் ஞாயிற்றுக்கிழமைகளில் நடைபெறும் இயற்கை வாரச் சந்தையில், சுய உதவிக் குழுக்கள் இயற்கை முறையில் உற்பத்தி செய்த பொருட்களான உடலுக்கு நன்மை தரும் சிறுதானியங்கள், பசுமையான காய்கறிகள், சுவை மிகுந்த பழங்கள், ஆரோக்கியம் தரும் எண்ணெய் வகைகள், ருசி மிகுந்த ஊறுகாய்கள், பாரம்பரிய சுவை நிறைந்த உணவுப் பொருட்கள், சுற்றுச்சுழலைக் காக்கும் துணி மற்றும் சணல் பைகள், இயற்கை உரமிட்டு உருவாக்கிய விதைகள், செடிகள் மற்றும் தரமான உற்பத்திப் பொருட்கள் விற்பனை செய்யப்பட உள்ளன.

மேலும் பாரம்பரியமும், சுவையும் நிறைந்த உணவு வகைகளை விற்பனை செய்யும் உணவு அரங்கும் இயற்கை வாரச் சந்தையில் அமைக்கப்பட்டுள்ளது.

காலை 07.00 மணி முதல் இரவு 08.00 மணி வரை நடைபெறும் இயற்கை வாரச் சந்தைக்கு அனுமதி இலவசம். இத்தகைய சிறப்பு மிகுந்த இயற்கை வாரச் சந்தைக்கு அனைவரும் வருகை தந்து மகளிர் சுய உதவிக் குழுக்கள் இயற்கை முறையில் உற்பத்தி செய்த தரமான பொருட்களை வாங்கி பயனடைவதோடு மகளிர் சுய உதவிக் குழுக்களின் பொருளாதார முன்னேற்றத்திற்கு உதவிட வேண்டுமாறு கேட்டுக் கொள்ளப்படுகிறது. மேலும் பிளாஸ்டிக் உபயோகத்தைத் தவிர்த்திட, பைகள் மற்றும் எண்ணெய் கொள்கலன்களைக் கொண்டு வரும்படி கேட்டுக் கொள்ளப்படுகிறது.











# உலக நுகர்வோர் உரிமைகள் நாள் [மார்ச் 15]



ஆண்டுதோறும், மார்ச் 15ஆம் தேதி, உலக நுகர்வோர் உரிமைகள் தினமாக அனுசரிக்கப்படுகிறது. கன்ஸ்யூமர் இன்டர்நேஷனல் என்று அழைக்கப்படும், உலக நுகர்வோர் அமைப்புகளின் கூட்டமைப்பு, ஒவ்வொரு ஆண்டும் உலக நுகர்வோர் உரிமைகள் தினத்தை ஏற்பாடு செய்கிறது. நுகர்வோர் உரிமைகள் பற்றிய விழிப்புணர்வை ஏற்படுத்துவதோடு, நிறுவனங்கள் மற்றும் அவற்றின் பிராண்டுகளின் மூலம் ஏமாற்றப்படுவதை தடுக்க, நுகர்வோர் எடுக்க வேண்டிய நடவடிக்கைகள் குறித்தும் விழிப்புணர்வை ஏற்படுத்துவதே இந்த நாளின் முக்கிய நோக்கம்.

அமெரிக்க ஜனாதிபதியாக இருந்த ஜான். எப். கென்னடி, 1962 ஆம் ஆண்டு மார்ச் மாதம் 15 ஆம் தேதி அமெரிக்க பாராளுமன்றத்தில் நுகர்வோர் பாதுகாப்பு தொடர்பாகவும், நுகர்வோர் உரிமைகள் சட்டம் தொடர்பாகவும் முக்கிய உரையாற்றினார். அதனைத் தொடர்ந்து 1963 ஆம் ஆண்டில் இருந்து ஒவ்வொரு வருடமும் மார்ச் மாதம் 15 ஆம் தேதி உலக நுகர்வோர் உரிமைகள் நாள் ஆக கடைப்பிடிக்கப்படுகிறது.

# உலக வன நாள் [மார்ச் 21]



“புவியின் நுரையீரல்கள்” என அழைக்கப்படும் வனங்களை பாதுகாக்க வேண்டியதன் அவசியத்தை உணர்த்தவும், மக்களிடையே விழிப்புணர்வினை ஏற்படுத்தவும் ஆண்டுதோறும் மார்ச் 21ஆம் தேதி உலக வன நாளாக கொண்டாடப்படுகின்றது. காடுகள் நமக்கு மரம், தண்ணீர், மருந்து, மூலிகைகள் என அனைத்தையும் கொடுப்பதுடன், நமது ஆரோக்கியத்திற்கு சுத்தமான காற்று, உணவு, காலநிலை மாற்றத்திற்கு உதவி என அனைத்தையும் வழங்குகின்றன. ஆனால், தீ, பூச்சிக்கொல்லி மருந்துகள், வறட்சி, காடுகள் அழிப்பு ஆகியவற்றால் இந்த காடுகள் அழிந்து வருவது நமக்கும், எதிர்கால சந்ததியினருக்கும் அச்சுறுத்தலை ஏற்படுத்துகிறது. எனவே காடுகளையும், காட்டு விலங்குகளையும், இயற்கையையும் பாதுகாக்க குறைந்தபட்சம் நமது வீடுகளில் மற்றும் சுற்றுப்புறங்களிலாவது மரக்கன்றுகளை நட்டு வளர்ப்போம் என்று உலக வன நாளில் நாம் உறுதி பூணுவோம்.

# உலக தண்ணீர் தினம் [மார்ச் 22]



“நீரின்றி அமையாது உலகு” என்ற வள்ளுவரின் கூற்றினை யாராலும் மறுக்க முடியாது. இந்த பூமியில் வாழும் அத்தனை உயிரினத்திற்கும் நீர் இன்றியமையாத தேவையாக உள்ளது. குறைந்த அளவில் தரையை தோண்டினாலே நிலத்தடி நீர் கிடைத்த காலங்கள் மாறி, இன்று பல நூறு அடி ஆழம் தோண்டினாலும் வறண்ட நிலையிலேயே இருக்கிறது நம் பூமி. 1992 ஆம் ஆண்டு ரியோ டி ஜெனிரோவில் நடைபெற்ற சுற்றுச்சூழல் மற்றும் மேம்பாடு குறித்த ஐ.நா பொதுச் சபையின் மாநாட்டில் உலக நீர் நாள் கொண்டாடப்பட வேண்டும் என்று வலியுறுத்தப்பட்டு, 1993 முதல் ஆண்டுதோறும் மார்ச் 22ஆம் தேதி உலக நீர் நாள் கடைப்பிடிக்கப்பட்டு வருகிறது.

கடந்த காலம் மட்டுமின்றி தற்போதும் தண்ணீருக்காக மக்கள் படும் சிரமங்களை நாம் பார்த்துக் கொண்டுதான் இருக்கிறோம். நாம் சிந்திப்பதை நிறுத்திவிட்டு செயல்படுவதற்கான நேரமாகக் கருத வேண்டும். உலக நீர் தினத்தில், நீரை வீணாக்க மாட்டோம் நீரை வீணாக்க யாரையும் அனுமதிக்க மாட்டோம் என்று உறுதியேற்போம்.

# உங்களுக்குத் தெரியுமா?
# கியாரண்டி, வாரண்டி வேறுபாடுகள்

தற்போது ஒரே தன்மை, வகை, அளவு மற்றும் தரத்தினைக் கொண்ட கோடிக்கணக்கான பொருட்கள் ஒன்றை விடுத்து, மற்றொன்றைத் தேர்வு செய்ய இயலாத வகையில் சந்தையில் நிரம்பி வழிகின்றன. நுகர்வோர் என்ற வகையில், உற்பத்தி நிறுவனங்களின் தரத்தினைக் கொண்டு நமக்குத் தேவையான பொருளை நாமே தேர்வு செய்யலாம். இதில் வாரண்டி (Warranty) என்பது, விற்பனை செய்யப்படும் பொருளானது சரியான நிலையில் உள்ளது என்ற உறுதியையும், மாறாக குறைபாடுகள் காணப்பட்டால் அதற்கான பழுது மற்றும் பதிலீடு ஆகியவற்றிற்கு உற்பத்தியாளரே பொறுப்பாவார் என்ற அறிவிப்பையும் வாடிக்கையாளருக்கு அளிப்பதாகும்.

இந்நிலையில், பொருளின் தரம் குறித்து விற்பனையாளரின் பொறுப்பினைக் குறிக்கும் கியாரண்டி (Guarantee) என்பது வாரண்டி விடுத்து என்ற சொல்லுடன் வழக்கமாக குழப்பத்தை ஏற்படுத்துவதாகும். வாரண்டி என்பது எழுத்துப்பூர்வமாகவும், கியாரண்டி என்பது குறிப்பான பொறுப்பினையும் குறிப்பனவாகும்.

வழக்கமான முறையிலோ அல்லது ஆன்லைன் முறையிலோ பொருட்களை வாங்கும் முன்பு, வாடிக்கையாளரின் பணத்திற்கான பாதுகாப்பிற்கும், மோசடியினைத் தவிர்ப்பதற்கும், வாரண்டி மற்றும் கியாரண்டி ஆகியவற்றிற்கிடையேயான வேறுபாட்டை அறிவது அவசியமாகிறது.

| கியாரண்டி | வாரண்டி |
|---|---|
| ஒரு பொருள் விற்பனை செய்யப்பட்ட பின் அப்பொருளின் செயல்பாடு மற்றும் சேவை குறித்த வாக்குறுதியே கியாரண்டி எனப்படும். | விற்பனை செய்யப்படும் பொருள் குறித்து தெரிவிக்கப்பட்டுள்ள விவரங்கள் உண்மையானவை என உற்பத்தியாளர் / விற்பனையாளரால் நுகர்வோருக்கு அளிக்கப்படும் உறுதியே வாரண்டி எனப்படும். |
| கியாரண்டி என்பது, விற்பனை செய்யப்படும் பொருளின் தரத்தில் குறைவிருந்தால், பழுது நீக்கம், பதிலீடு அல்லது பணத்தைத் திருப்பி அளித்தல் ஆகியவற்றின் மூலம் நிவர்த்தி செய்யப்படும் என வாடிக்கையாளருக்கு உற்பத்தியாளரால் அளிக்கப்படும் வாக்குறுதியாகச் செயல்படுகிறது. | வாரண்டி என்பது, பொருளின் தன்மை குறித்து குறிப்பிடப்பட்டுள்ளவை அனைத்தும் உண்மை மற்றும் நேர்மையானவை எனவும், தவறும்பட்சத்தில் பழுது நீக்கம் அல்லது பதிலீடு மூலம் நிவர்த்தி செய்யப்படும் என எழுத்துப்பூர்வமாக அளிக்கப்படும் உறுதியாகும். |
| கியாரண்டி என்பது பொறுப்பிற்கான குறிப்பாகும். | வாரண்டி என்பது உறுதி ஆகும். |
| பொருள், சேவை மற்றும் உரிய நபருக்குப் பொருந்தும். | பொருளுக்கு மட்டுமே பொருந்தும். |
| வாய்மொழியாகவோ அல்லது எழுத்துப்பூர்வமாகவோ இருக்கும். | பொதுவாக எழுத்துப்பூர்வமாக இருப்பதால் நிரூபிப்பது எளிதானது. |
| கட்டணம் ஏதுமில்லை. | பொருளை வாங்குபவர் வாரண்டிக்கான கட்டணத்தை செலுத்த வேண்டியிருக்கும். |
| ஒவ்வொரு பொருளுக்கும் கால அளவு மாறுபடுகிறது. | நீண்டகாலம் உத்தரவாதம் |
| குறைபாடு இருப்பின் பணத்தை திரும்பப் பெற முடியும். | குறைபாடு இருப்பின் பணத்தை திரும்பப் பெற முடியாது. |

பொதுவாக, பொருளின் செயல்பாடு குறித்த நேர்வுகளில், வாரண்டி மற்றும் கியாரண்டி ஆகிய இரண்டும் ஓரளவு ஒரே மாதிரியாகத் தோன்றினாலும், வாரண்டியும், கியாரண்டியும் வெவ்வேறு தன்மை கொண்டவையாகும்.

## வணிகம் வளர்க...

# புதுக்கோட்டை மாவட்ட மகளிர் சுய உதவிக் குழுக்களின் தரமான தயாரிப்புப் பொருட்கள்

தமிழ்நாடு மகளிர் மேம்பாட்டு நிறுவனத்தின் வழிகாட்டுதலில் செயல்பட்டு வரும் மகளிர் சுய உதவிக் குழுக்களின் உறுப்பினர்கள், தரமான பொருட்கள் பலவற்றை தயாரித்து விற்பனை செய்து வருகின்றனர். சுய உதவிக் குழுக்களின் தயாரிப்பு பொருட்களை அனைவரும் அறிந்து கொள்ளவும், அவற்றிற்கான சந்தை வாய்ப்புகளை அதிகரித்திடவும் மாதந்தோறும் முற்றம் இதழில் சுய உதவிக் குழுக்களின் தயாரிப்புப் பொருட்கள் குறித்த விபரங்கள் வெளியிடப்பட்டுள்ளன.

புதுக்கோட்டை மாவட்டம்

| சுய உதவிக் குழுவின் பெயர் | தயாரிப்புப் பொருளின் பெயர் | |
|---|---|---|
| நாகவள்ளி மகளிர் சுய உதவிக் குழு, புதுக்கோட்டை மாவட்டம். கைபேசி : 87548 12060 | அலுவலக உபயோகப் பொருட்கள் |  |
| வேலு நாச்சியார் மகளிர் சுய உதவிக் குழு புதுக்கோட்டை மாவட்டம். கைபேசி : 72990 60342 | சணல் பொருட்கள் |  |
| அன்பு மலர் மகளிர் சுய உதவிக் குழு புதுக்கோட்டை மாவட்டம். கைபேசி : 99416 90385 | கையால் செய்யப்பட்ட நூல் வளையல்கள் |  |
| பாரத மாதா மகளிர் சுய உதவிக் குழு புதுக்கோட்டை மாவட்டம். கைபேசி : 88385 06562 | சுடுமண் பொருட்கள் |  |

# மக்கள் நலம் நாடும் அரசின் 2024–2025ஆம் ஆண்டிற்கான நிதி நிலை அறிக்கையில் மகளிரின் வாழ்வாதார முன்னேற்றத்திற்கு பயன்தரும் அறிவிப்புகள்

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் தலைமையில் செயல்படும் அரசானது மகளிர் நலனில் பெரிதும் அக்கறைக் கொண்டு செயல்பட்டு வருகிறது. மகளிர் நலம் நாடும் அரசின் 2024-2025ஆம் ஆண்டிற்கான நிதி நிலை அறிக்கையில் மகளிரின் வாழ்வாதார முன்னேற்றத்திற்கு பயன் தரும் பல்வேறு அறிவிப்புகள் வெளியிடப்பட்டுள்ளன.






## முதலமைச்சரின் தாயுமானவர் திட்டம்

கடந்த ஒரு நூற்றாண்டு காலமாக நாட்டிற்கே முன்னோடியாக விளங்கிடும் வகையில், தமிழ்நாட்டில் அறிமுகப்படுத்தப்பட்ட பல சமூக நலத்திட்டங்களின் வாயிலாக வறுமையை குறைப்பதில் நமது மாநிலம் மிகச் சிறந்த முன்னேற்றத்தை அடைந்துள்ளது. தற்போது மிகவும் வறிய நிலையில் வாழ்ந்து கொண்டிருக்கும் கடைக்கோடி ஏழைக் குடும்பங்களையும் கண்டறிந்து, அவர்களின் வாழ்க்கைத் தரத்தை முன்னேற்றிட அரசு முடிவு செய்துள்ளது. அடுத்து வரும் இரண்டு ஆண்டுகளில் மிகவும் வறிய நிலையில் உள்ள சுமார் ஐந்து இலட்சம் ஏழைக் குடும்பத்தினருக்கு அரசின் உதவிகள் அனைத்தையும் ஒருங்கிணைத்து வழங்கி, விரைவில் அவர்களை வறுமையில் இருந்து மீட்டெடுத்திட அரசு உறுதியாக உள்ளது. ஆதரவற்றோர், தனித்து வாழும் முதியோர், ஒற்றைப் பெற்றோர் குடும்பங்கள், பெற்றோரை இழந்த குழந்தைகள், மனநலம் குன்றியவர்கள், மாற்றுத்திறனாளிகள், சிறப்புக் குறைபாடு உடைய குழந்தைகள் உள்ள குடும்பங்கள் போன்ற சமூகத்தின் விளிம்பு நிலையில் வாழ்ந்திடும் மக்கள் அனைவரும் இத்திட்டத்தின் கீழ் அடையாளம் காணப்பட்டு, அவர்களுக்குத் தேவையான அடிப்படை வசதிகள் மட்டுமன்றி கல்வி, வேலைவாய்ப்பு, திறன் மேம்பாடு, வீடுகள் போன்ற அனைத்து உதவிகளும் வழங்கப்படும். 'முதலமைச்சரின் தாயுமானவர் திட்டம்' என்ற பெயரிலான இப்புதிய திட்டத்தில், மக்கள் பிரதிநிதிகள், தொண்டு நிறுவனங்கள் மற்றும் வங்கிகளின் பங்கேற்பும் உறுதி செய்யப்படும். இந்த வரவு - செலவுத் திட்ட மதிப்பீடுகளில் ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித் துறைக்கு 27,922 கோடி ரூபாய் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.




## கலைஞர் மகளிர் உரிமைத் திட்டம்

மகளிர் நலன் காக்க பல்வேறு நலத்திட்டங்களைத் தீட்டி தமிழ்நாடு அரசு செயல்படுத்தி வருகிறது. அந்த வரிசையில் "சொன்னதைச் செய்வோம், செய்வதைச் சொல்வோம்" என்ற இலக்கின்படி செயல்பட்டு அறிவிக்கப்பட்ட கலைஞர் மகளிர் உரிமைத் தொகை திட்டத்தின் மூலம், ஒரு கோடியே பதினைந்து இலட்சம் குடும்பத் தலைவிகளுக்கு ஒவ்வொரு மாதமும் ஆயிரம் ரூபாய் அவர்களுடைய வங்கிக் கணக்கில் நேரடியாகச் செலுத்தப்பட்டு வருகிறது. மகளிர் நலன் காக்கும் இத்திட்டத்திற்காக இந்த ஆண்டு 13,720 கோடி ரூபாய் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.




## பள்ளிக் குழந்தைகளின் பசியைப் போக்கும் முதலமைச்சரின் காலை உணவுத் திட்டம்

'பள்ளிக்கல்வியை மேலும் பரவலாக்கவும், கற்றலை இனிமையாக்கவும், எல்லாக் குழந்தைகளும் பசியின்றி கல்வியறிவு பெற்றிடவும் எந்தத் தியாகத்தையும் செய்திடுவோம்' என்ற மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் உன்னத நோக்கத்தை செயல்படுத்திட, தமிழ்நாட்டில் உள்ள 30 ஆயிரத்து 992 அரசுத் தொடக்கப் பள்ளிகளில் ஒன்றாம் வகுப்பு முதல் ஐந்தாம் வகுப்பு வரை பயிலும் 15 இலட்சம் மாணவர்கள் பயனடையும் வகையில் இத்திட்டம் செயல்படுத்தப்படுகிறது. மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் உன்னத நோக்கத்தினை மேலும் முழுமையாகச் செயல்படுத்திட, தமிழ்நாட்டின் ஊரகப் பகுதிகளில் இயங்கிவரும் அரசு உதவிபெறும் பள்ளிகளில் ஒன்றாம் வகுப்பு முதல் ஐந்தாம் வகுப்புவரை பயிலும் மேலும் சுமார் இரண்டு இலட்சத்து 50 ஆயிரம் மாணவர்கள் பயனடையும் வகையில், வரும் கல்வி ஆண்டு முதல் இத்திட்டம் விரிவுபடுத்தப்படும். இத்திட்டத்தைச் செயல்படுத்துவதற்காக வரும் நிதியாண்டில் 600 கோடி ரூபாய் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. இத்திட்டத்திற்கான காலை உணவுகள் சுய உதவிக் குழுக்கள் மூலம் தயாரிக்கப்பட்டு பள்ளிகளுக்கு அனுப்பப்படுகிறது.




## மகளிர் சுய உதவிக் குழுக்களுக்கு ரூ. 35,000 கோடி வங்கிக் கடன் இணைப்பு

நாட்டுக்கே முன்னோடியாக, 1989 ஆம் ஆண்டில் தர்மபுரியில் முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களால் ஆரம்பிக்கப்பட்ட சுய உதவி குழு இயக்கம் ஆல் போல் தழைத்து, அருகு போல் வேரோடி, இன்று ஒரு மகத்தான மக்கள் இயக்கமாகத் திகழ்கிறது. மகளிர் சுயஉதவிக் குழுக்களின் திறன் மேம்பாட்டிற்கும் வாழ்வாதார வளர்ச்சிக்கும் பல்வேறு நடவடிக்கைகளை இந்த அரசு எடுத்து வருகிறது. வரும் நிதியாண்டில், 10,000 சுய உதவிக் குழுக்கள் உருவாக்கப்படுவதுடன், 35,000 கோடி ரூபாய் அளவிற்கு வங்கிக் கடன் வழங்க இலக்கு நிர்ணயிக்கப்பட்டுள்ளது.

## மக்களைத் தேடி மருத்துவம்

தமிழ்நாட்டில் மருத்துவத் துறையின் தொடர் முயற்சிகளினால், 2030 ஆம் ஆண்டுக்குள் அடைய வேண்டிய கர்ப்பிணித் தாய்மார்கள் மற்றும் குழந்தைகள் நலம் தொடர்பான நிலைத்த வளர்ச்சி இலக்குகளை நமது மாநிலம் ஏற்கெனவே எட்டியுள்ளது. இந்நிலையில், தமிழ்நாட்டில் தொற்றாநோய்களின் பரவல் அதிகரித்து வருவதை கருத்திற்கொண்டு, தொற்றாநோய் உண்டாவதற்கு முக்கியக் காரணிகளாக விளங்கும் உயர் இரத்த அழுத்தம், சர்க்கரை நோய் போன்றவற்றைக் கட்டுப்படுத்துவது அவசியம். இந்நோக்கத்தோடு,




"மக்களைத் தேடி மருத்துவம்' எனும் ஒரு மகத்தான திட்டத்தினை தமிழ்நாடு அரசு செயல்படுத்தி வருகிறது. குடும்பத்தில் உள்ள அனைத்து உறுப்பினர்களும் வீட்டிலிருந்தே பயன்பெறும் வகையில், சேவைகளை வழங்கும் இத்திட்டத்திற்காக, 243 கோடி ரூபாய் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

கிராமப்புற மற்றும் நகர்ப்புறங்களில் ஊராட்சி அளவிலான கூட்டமைப்பு மூலம் அடையாளம் காணப்பட்டு சுகாதாரத் துறையால் பயிற்சி அளிக்கப்பட்ட சுய உதவிக் குழு பெண்கள் துணை சுகாதார மையங்களுடன் (HSC) இணைக்கப்பட்டுள்ளனர். மகளிர் சுகாதார தன்னார்வலர்கள் நீரிழிவு நோயாளிகள் மற்றும் இரத்த அழுத்தம் உள்ள நோயாளிகளை பரிசோதித்து, அவர்களுக்கு சிகிச்சைக்காக ஆலோசனை வழங்குவதோடு, நாள்பட்ட நோயாளிகளுக்கு மருந்துகளையும் வழங்குகிறார்கள்.




## ஒருங்கிணைந்த பண்ணைய தொகுப்புகள்

ஒருங்கிணைந்த பண்ணையத்தினால், விவசாயிகள், பயிர் சாகுபடியுடன் கறவை மாடுகள், ஆடுகள் வளர்த்தல், பழ மரங்கள், தேனீ வளர்ப்பு, மண்புழு உரம் தயாரித்தல் போன்ற வேளாண் சார்ந்த பணிகளையும் மேற்கொண்டு தற்சார்புடன் கூடிய வாழ்வாதார முன்னேற்றத்தினை அடைய முடியும். கடந்த மூன்று ஆண்டுகளில், 40,888 ஒருங்கிணைந்த பண்ணைய அமைப்புகள் 142 கோடி ரூபாய் மானியத்தில் அமைக்கப்பட்டு, 40,888 விவசாயிகள் பயனடைந்து அவர்களது வாழ்வாதாரம் உயர்ந்துள்ளது. 2024-2025-ஆம் ஆண்டில் 14,000 ஒருங்கிணைந்த பண்ணைய தொகுப்புகள் அமைத்திட, 42 கோடி ரூபாய் நிதி ஒதுக்கீடு செய்யப்படும்.




## இயந்திர வாடகை மையங்கள்

விவசாயிகளிடையே அதிகரித்து வரும் வேளாண் இயந்திரத் தேவையினை நிவர்த்தி செய்து, உயர்மதிப்பு வேளாண் இயந்திரங்கள் பயன்பாட்டினை ஊக்குவிக்க, தனியார் வேளாண் இயந்திர வாடகை மையங்கள் அமைக்க விவசாயிகள், ஊரகத் தொழில்முனைவோர்கள், விவசாயச் சங்கங்கள், விவசாயக் கூட்டுறவு சங்கங்கள், உழவர் உற்பத்தியாளர் அமைப்புகளுக்கு அரசு மானியம் வழங்கி வருகிறது. இதன் தொடர்ச்சியாக, பல்வேறு மாவட்ட விவசாயிகளின் கோரிக்கைகளை ஏற்று, 2024-2025-ஆம் ஆண்டில், 207 வேளாண் இயந்திர வாடகை மையங்கள், மொத்தம் 32 கோடியே 90 இலட்சம் ரூபாய் மானியத்தில் அமைக்கப்படும்.

## இயற்கை இடுபொருள் தயாரித்தல் மையம்

உயிர்ம வேளாண்மைக்கு இன்றியமையாத, பஞ்சகவ்யம், ஜீவாமிர்தம், மண்புழு உரம், அமிர்தக்கரைசல், மீன்அமிலம் போன்றவற்றைத் தயாரித்து விற்பனை செய்ய ஆர்வமுள்ள 100 குழுக்களுக்கு இயற்கை இடுபொருள் தயாரித்தல் மையம் அமைத்து ஊக்குவிக்க, ஒரு கோடி ரூபாய் ஒதுக்கீடு செய்யப்படும்.







## நடமாடும் நெல் உலர்த்தும் இயந்திரங்கள்

கொள்முதலுக்கு ஏற்றவாறு நெல்லின் ஈரப்பதத்தைக் குறைப்பதன் மூலம் நெல்லின் சேமிப்புக் காலம் அதிகரிக்கும். இதனைக் கருத்தில் கொண்டு, விவசாயிகளின் கோரிக்கைகளை ஏற்று, வேளாண் இயந்திரமயமாக்குதல் திட்டத்தில், தனிப்பட்ட விவசாயிகள், விவசாய சுய உதவிக் குழுக்கள், விவசாயக் கூட்டுறவு சங்கங்கள், உழவர் உற்பத்தியாளர் அமைப்புகள், தொழில் முனைவோர்களுக்கு, 10 நடமாடும் நெல் உலர்த்தும் இயந்திரங்கள் மானியத்தில் வழங்கிட, 90 இலட்சம் ரூபாய் ஒதுக்கீடு செய்யப்படும்.




## மஞ்சள் மெருகூட்டும் இயந்திரம்

நாட்டின் முக்கியமான மஞ்சள் சந்தைகளில் ஒன்றானது ஈரோடு. அறுவடைக்குப்பின் மஞ்சளைப் பதப்படுத்தி, மெருகேற்றம் செய்வதன் மூலம் மஞ்சளின் சேமிப்புக்காலமும் தரமும் மேம்படுத்தப்படுகிறது. எனவே, மஞ்சள் விவசாயிகள், உழவர் உற்பத்தியாளர் நிறுவனங்களின் பயன்பாட்டிற்காக மஞ்சளுக்கென ஐந்து மெருகூட்டும் இயந்திரங்களும், எட்டு மஞ்சள் வேகவைக்கும் இயந்திரங்களும், 2 கோடியே 12 இலட்சம் ரூபாய் ஒன்றிய, மாநில அரசு நிதியில், ஈரோடு, கள்ளக்குறிச்சி, தருமபுரி மாவட்ட ஒழுங்குமுறை விற்பனைக் கூடங்களில் அமைக்கப்படும்.




## இல்லம் தேடிக் கல்வி திட்டம்

கோவிட் பெருந்தொற்றுக் காலத்தில் இல்லத்தில் முடங்கிக் கிடந்தவை குழந்தைகள் மட்டுமல்ல; அவர்களது கல்விக் கனவும் தான். அதனை மீட்டு அவர்களிடம் ஏற்பட்ட கற்றல் இடைவெளியைப் போக்கவும் கற்றல் இழப்பை ஈடுசெய்யவும், இடைநின்ற குழந்தைகளை மீண்டும் பள்ளிகளில் சேர்க்கவும் முதலமைச்சர் அவர்களால் இல்லம் தேடிக் கல்வி திட்டம் தொடங்கி வைக்கப்பட்டது. மாநிலம் முழுவதும் அனைத்துக் குடியிருப்புப் பகுதிகளிலும் தன்னார்வலர்கள் மூலம் செயல்படுத்தப்பட்டு வரும் இத்திட்டம் குழந்தைகளிடம் ஏற்பட்ட கற்றல் இழப்பை மீட்டெடுத்ததில் மிகப்பெரும் பங்காற்றியுள்ளது. வரும் கல்வியாண்டு முதல் இத்திட்டத்தின் இரண்டாம் கட்டத்தை, தேர்ந்தெடுக்கப்பட்ட பகுதிகளில் செயல்படுத்திட 100 கோடி ரூபாய் நிதி ஒதுக்கப்பட்டுள்ளது.

## பனை பொருள் வளர்ச்சி பனை மேம்பாட்டு இயக்கம்

தமிழ்நாட்டில் பனை மரங்களின் எண்ணிக்கை வெகுவாகக் குறைந்து வருவதை அரசு கவனத்தில் கொண்டு, பனை மரங்களின் எண்ணிக்கையினை அதிகரிக்கும் பொருட்டு, மூன்று ஆண்டுகளாகத் தொடர்ந்து பனை மேம்பாட்டு இயக்கத்தினைச் செயல்படுத்தி வருகிறது. இத்திட்டத்தில், 47 இலட்சம் பனை விதைகள் நடப்பட்டதுடன், 950 நபர்களுக்குத் தரமான பனை வெல்லம், பனங்கற்கண்டு, மதிப்புக் கூட்டுப் பொருட்கள் தயாரிப்பதற்கான பயிற்சியும் கருவிகளும் அளிக்கப்பட்டு, 350 மகளிருக்கு பனை ஓலைப் பொருட்கள் தயாரிக்கும் பயிற்சியும் கருவிகளும் வழங்கப்பட்டன.

2024-2025ஆம் ஆண்டில், பனை சாகுபடியினை ஊக்குவிக்க, 10 இலட்சம் பனை விதைகள் தோட்டக்கலைத் துறையின் மூலம் நடப்படும். மேலும், பனைத் தொழிலாளர்களின் வாழ்வாதாரத்தை மேம்படுத்தும் பொருட்டு 200 பனைத் தொழிலாளர்களுக்கு, தரமான பனை வெல்லம், பனங்கற்கண்டு, பிற மதிப்புக் கூட்டுப் பொருட்கள் தயாரிப்பதற்கான பயிற்சிகளும், 100 மகளிருக்கு பனை ஓலைப்பொருட்கள் தயாரிக்கும் பயிற்சியும், பயிற்சி பெற்ற அனைவருக்கும் உரிய கருவிகளும் வழங்கப்படும். இதற்கென, ஒரு கோடியே 14 இலட்சம் ரூபாய் நிதி ஒதுக்கீடு செய்யப்படும்.

## பண்ணை மகளிர் சுய உதவிக் குழுக்கள்

விதைப்பு முதல் வேளாண்மை தொடர்பான அனைத்துப் பணிகளிலும் மகளிரின் பங்கு மிகமுக்கியமாகும். எனவே, 2024-2025-ஆம் ஆண்டில், பயிற்சி பெற்ற மகளிர் சுய உதவிக் குழுக்களைக் கொண்டு, தோட்டக்கலைத்துறையின் ஒருங்கிணைப்பின் மூலம், 2 கோடியே 40 இலட்சம் ரூபாய் மதிப்பீட்டில் 60 தென்னை நாற்றுப்பண்ணைகள் அமைக்கப்படும். தென்னங்கன்றுகள் தோட்டக்கலைத் துறையினால் கொள்முதல் செய்யப்பட்டு, அரசுத் திட்டங்களின் கீழ் விநியோகிக்கப்படும்.

மேலும், வேளாண் உற்பத்திக்கு விதையே முக்கிய இடுபொருள் என்பதால், பயறு வகைகள், எண்ணெய்வித்துகளில், 100 விதை உற்பத்தித் தொகுப்புகள் அமைப்பதற்கு, 2 கோடி ரூபாய் நிதி ஒதுக்கப்படும். இதற்குத் தேவையான பயிற்சியும், ஆதார விதைகளும் வேளாண்மைத்துறை வழங்குவதுடன், மகளிர் சுய உதவிக் குழுக்கள் உற்பத்தி செய்த விதைகளை, உற்பத்தி மானியம் வழங்கி வேளாண்மைத் துறையே கொள்முதல் செய்து, வேளாண்மை விரிவாக்க மையங்கள் மூலம் விவசாயிகளுக்கு விநியோகிக்கப்படும்.



## உடல் நலம் காப்போம்...

# இளம் வயது பெண்களை அதிகம் தாக்கும் 'லூபஸ்' நோய்

'நோயற்ற வாழ்வே குறைவற்ற செல்வம்' என்பது பழமொழி. அதற்கேற்ப நம்மை நாம் உடல் ரீதியாகவும், மன ரீதியாகவும் சரிவர பார்த்துக் கொள்வது நம் முக்கிய கடமைகளில் ஒன்று. நாளுக்கு நாள் புதிது புதிதாக நோய்கள் பெருகிக் கொண்டே வருகின்றன. அவற்றில் பல நோய்கள் குறித்த விழிப்புணர்வு நம்மிடம் இல்லை.

உதாரணத்துக்கு, 'லூபஸ்' என்று சொல்லப்படும் எஸ்.எல்.ஈ. (Systemic lupus erythematosus (SLE). இது நம் உடலின் தலை முதல் கால் வரை எந்த உறுப்பை வேண்டுமானாலும் பாதிக்கும் தன்மை கொண்டது.

இந்த நோயில், நம் உடலின் எதிர்ப்பு சக்தியே நம் திசுக்களை சேதப்படுத்தி, வீக்கம், உடல் உறுப்பு சேதம், உயிருக்கு ஆபத்து போன்ற பல்வேறு ஆபத்துகளை ஏற்படுத்தி விடும். இதை பற்றிய விழிப்புணர்வை மக்களுக்கு எடுத்துச் சொல்லவே, வருடந்தோறும் மே 10-ம் தேதி 'சர்வதேச லூபஸ் தினம்' அனுசரிக்கப்படுகிறது.

### லூபஸ்... காரணங்களும், அறிகுறிகளும்

ஆய்வின் அடிப்படையில், ஆண்களை விடவும், இளம் வயது பெண்களே இந்த "லூபஸ்" நோயால் அதிகம் பாதிப்படைகிறார்கள். இதற்கு மரபியல் முக்கிய காரணமாக இருந்தாலும், அதிக நேரம் சூரிய ஒளியில் இருத்தல், ஹார்மோன் மாற்றங்கள், தொற்றுநோய்கள் போன்ற புற விஷயங்களும் நமக்குள் இருக்கும் நோயைத் தூண்டிவிடும் காரணிகளாகச் செயல்படுகின்றன.

நீண்ட நாள்களாகத் தொடரும் காய்ச்சல், மூட்டுவலி, உடல் மற்றும் கன்னங்களில் தோன்றும் சிவப்பு நிற தடிப்புகள், அதிக முடி உதிர்தல் போன்ற அடிப்படை அறிகுறிகளைக் கொண்டு நமக்கு 'லூபஸ்' இருப்பதற்கான வாய்ப்புகளை நாம் கணிக்க முடியும்.

இதன் தீவிரத்தன்மை அதிகரித்தால், கல்லீரல், நரம்பு மண்டலம், இதயம் என உடலின் முக்கிய உறுப்புகள் பாதிக்கவும் வாய்ப்புகள் உண்டு.

### என்னென்ன சிகிச்சைகள்

'லூபஸ்' நோயினை, வெறும் அறிகுறிகளை மட்டுமே வைத்து நாம் முற்றிலுமாக உறுதி செய்துவிட முடியாது. காரணம், இந்த அறிகுறிகளுக்கு வேறு சில விஷயங்களும், தொற்று நோய்களும் கூட காரணமாக இருக்கக் கூடும். எனவே, ரத்தம் மற்றும் சிறுநீர் பரிசோதனை, ஈ.எஸ்.ஆர்., சி.ஆர்.பி. போன்ற பலதரப்பட்ட மருத்துவ பரிசோதனைகளுக்குப் பிறகுதான் இதனை உறுதி செய்ய முடியும்.

பின்பு, உடலின் எதிர்ப்பு சக்தியை மாற்றியமைத்தல், எதிர்ப்பு சக்தியைக் குறைத்தல், மருந்து, மாத்திரைகள், ஸ்டீராய்டுகள் என நோயின் தீவிரத்தைப் பொறுத்து பல்வேறு நிலையிலான சிகிச்சைகள் மேற்கொள்ள வேண்டும்.



# மலைவாழ் மக்களுக்கு வாழ்வாதார முன்னேற்றம் தந்த இயக்கம்

கன்னியாகுமரி மாவட்டம், பேச்சிப்பாறை ஊராட்சிக்குட்பட்ட முடவன் பொற்றை குக்கிராமத்தில் தமிழ்நாடு மாநில ஊரக வாழ்வாதார இயக்கத்தின் வழிகாட்டுதலில் மலைவாழ் மக்களை கொண்டு அமைக்கப்பட்ட மிளகு உற்பத்தியாளர் குழு சிறப்பாக செயல்பட்டு வருகிறது. இக்குழுவின் வெற்றிகரமான செயல்பாடு குறித்து அக்குழுவின் உறுப்பினர்கள் சொல்வதைக் கேட்போம் வாருங்கள். 'மிளகு உற்பத்தியாளர் குழு ஆரம்பிப்பதற்கு முன்பாக நாங்கள் உற்பத்தி செய்யும் மிளகை குறைந்த விலைக்கு இடைத்தரகர்களிடம் விற்று வந்தோம். இந்நிலையில் உற்பத்தியாளர் குழுவின் மூலம் கிடைக்கப் பெற்ற ரூ.1.50 இலட்சம் நிதியை வைத்து சுழற்சி முறையில் மிளகு வாங்கப்பட்டு, மற்ற உற்பத்தியாளர் குழுவையும் ஒருங்கிணைத்து உருவாக்கப்பட்ட திருவட்டார் மகளிர் உழவர் உற்பத்தியாளர் நிறுவனத்திற்கு விற்பனை செய்து வருகிறோம்.

தமிழ்நாடு மாநில ஊரக வாழ்வாதார இயக்கத்தில் உருவாக்கப்பட்டுள்ள உற்பத்தியாளர் குழு மூலம் நிதி உதவி வழங்கியதோடு மட்டுமல்லாமல் எங்களுடைய உற்பத்திப் பொருட்களை விற்பனை செய்திட முறையான விற்பனை சந்தைகளையும் ஏற்படுத்தி கொடுத்துள்ளதால் எங்களுடைய வருமானம் உயர்ந்துள்ளது. இதுமட்டுமல்லாமல் ரப்பர் அறுவடை குறித்து எங்களுக்குத் தரப்பட்ட பயிற்சி மிகவும் பயனுள்ளதாக இருக்கிறது. இதனால் ரப்பர் மரங்களில் காயம் ஏற்படாமல் அறுவடை செய்ய முடிகிறது. அந்தந்த பருவ காலங்களில் விளையும் மிளகு மற்றும் மஞ்சளுக்கு நல்ல விலை கிடைக்கிறது. மலைப் பகுதியில் உற்பத்தி செய்யப்படும் தேனை மக்கள் விரும்பி வாங்குகின்றனர். இந்த வருமானத்தின் மூலம் எங்களுடைய வாழ்வாதாரம் முன்னேற்றம் அடைந்துள்ளதுடன், எங்களின் குழந்தைகளையும் உயர் கல்வி படிக்க வைத்து வருகிறோம்.

எங்கள் பகுதியில் செயல்பட்டு வரும் திருவட்டார் மகளிரின் உழவர் உற்பத்தியாளர் நிறுவனம், மற்ற அனைத்து மலைவாழ் மக்களையும் ஒருங்கிணைத்து உருவாக்கப்பட்டுள்ளது. மேலும், சிறப்பு பகுதி மேம்பாட்டு திட்டத்தின் (SADP) கீழ் மாவட்ட ஆட்சித் தலைவரால் ரூ.38.18 லட்சம் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டு, தற்போது மிளகு அரவை இயந்திரம், மிளகு தரம் பிரிக்கும் இயந்திரம் போன்றவையும் மற்றும் இதனை நடைமுறைப்படுத்துவதற்கான பணிகளும் நடைபெற்று வருகின்றன. மேலும் மிளகு பொருட்களை காய வைப்பதற்கு தேவையான சூரிய கூடார உலர்த்தியினை வேளாண் பொறியியல் துறையின் மூலம் வாங்க திட்டமிடப்பட்டு அதற்கான வங்கி வரைவோலையும் வழங்கியுள்ளோம்.

திருவட்டார் மகளிர் உழவர் உற்பத்தியாளர் நிறுவனம் மூலமாக மலைவாழ் மக்களால் உற்பத்தி செய்யப்படும் இரப்பர் சீட்டினை உலர வைக்க புகை உலர்த்தி மையம் (Smoke House) அமைக்க ரூ.28.00 இலட்சத்திற்கு திட்ட அறிக்கை தயார் செய்து, மாவட்ட ஆட்சித்தலைவர் அவர்களிடம் சிறப்பு நிதி அல்லது CSR நிதி வழங்க சமர்ப்பித்துள்ளோம். எங்கள் அனைவரின் வாழ்வாதாரம் உயர்வதற்கு தேவையான பயிற்சி மற்றும் சிறப்பு திட்டங்களை உருவாக்கி தந்த கன்னியாகுமரி மாவட்ட ஆட்சி தலைவர் அவர்களுக்கும், தமிழ்நாடு மாநில ஊரக வாழ்வாதார இயக்கத்திற்கும் மற்றும் திட்ட இயக்குநர் அவர்களுக்கும், மலைவாழ் மக்கள் சார்பாக மனமார்ந்த நன்றியினைத் தெரிவித்துக் கொள்கிறோம்" என்று குறிப்பிட்டனர்.



# 90,000 முதலீடு... மாதம் ஒன்றரை லட்சம் டர்ன் ஓவர்...

## ஊறுகாய் பிசினஸில் உற்சாகப் பெண்கள்!

திருப்பத்தூர் மாவட்டம், ஒட்டப்பட்டி கிராமத்தில் பத்துக்கு பத்து இடத்தில் இயங்குகிறது ‘ஓம் சக்தி ஊறுகாய்’ தொழிற்சாலை. மிளகாயைக் காயவைப்பது, தயார் செய்த ஊறுகாயை பேக்கிங் செய்வது, எடை போடுவது என அங்கிருந்த பெண்கள் ஆளுக்கொரு வேலையில் மும்முரமாக இருந்தார்கள். நம்மை வரவேற்றுப் பேச ஆரம்பித்தார் ‘ஓம் சக்தி’ மகளிர் குழு உறுப்பினர் ஸ்ரீதேவி.

*“ஒரு நாப்கின் வாங்கணும்னாகூட ஓராயிரம் முறை யோசிச்சு வாங்குற காலம் இருந்தது. ஆனா, இன்னிக்கு எங்க நிலைமை அப்படி இல்ல. பள்ளிப்படிப்பைக்கூட முடிக்காத நாங்க, குழந்தைகளையும், வீட்டையும் கவனிச்சுக்கிட்டு மாசம் 10,000 ரூபாய்லேருந்து 20,000 ரூபாய் வரை சம்பாதிக்கிறோம். நாங்க மொத்தம் 13 பேரு. எல்லாருமே அக்கம்பக்கத்து வீட்டுக்காரங்கதான். ஒருத்தங்க மட்டும் காலேஜ் முடிச்சிருக்காங்க. 2015-ம் வருஷம், ‘ஓம் சக்தி’ மகளிர் குழுவை ஆரம்பிச்சோம். பணத்தை சேமிக்க மட்டும்தான் இந்தக் குழுவைப் பயன்படுத்திட்டிருந்தோம். அதாவது ஒவ்வொரு மாசமும் ஒவ்வொருத்தரும் 200 ரூபாய் சேமிப்போம். அந்தப் பணம் எங்க குழுவோட வங்கிக்கணக்குல இருந்துச்சு. 5,000 ரூபாய் சேர்ந்த அப்புறம் அந்தக் காசை எங்களுக்குள்ளேயே கடன் கொடுத்துக்க ஆரம்பிச்சோம். கடன் வாங்குறவங்க கொடுக்குற வட்டி எங்களோட சேமிப்புக் கணக்குல இருக்கும். வட்டிப் பணம் கொஞ்சம் சேர்ந்த அப்புறம் அதை நாங்க எல்லோரும் சேர்ந்து பிரிச்சுப்போம்”* என்று சொல்லி ஸ்ரீதேவி நிறுத்த, பிசினஸ் தொடங்கிய கதையைப் பகிர ஆரம்பித்தார் குழுத்தலைவி ராதிகா.

*“நான் பத்தாவது படிச்சிருக்கேன். என் கணவர் விவசாயக்கூலி. குடும்ப செலவுக்காக பீடி சுத்துற வேலை செஞ்சுட்டு இருந்தேன். 1000 பீடி சுத்துனா 200 ரூபாய் கிடைக்கும். குழந்தைங்க வளர வளர தேவைகள் அதிகமாச்சு. ஏதாவது பிசினஸ் பண்ணலாம்னு யோசிச்சுட்டு இருந்த நேரத்துல மகளிர் குழுக்களுக்கு அரசாங்கத்துலேருந்து ஊறுகாய் தயாரிக்க இலவசமா பயிற்சி வகுப்பு நடத்துனாங்க. ஊறுகாய் தயாரிக்கிறது தொடங்கி அதை பிசினஸா மாத்துறது வரை எல்லாமே சொல்லிக்கொடுத்தாங்க. பயிற்சி முடிஞ்சதும் குழுவுல கலந்து பேசினோம். 13 பேர்ல 9 பேர் பிசினஸ் ஆரம்பிக்கத் தயாரா இருந்தாங்க. ஆளுக்கு 10,000 ரூபாய் வீதம் மொத்தம் 90,000 ரூபாய் முதலீடு பண்ணி பிசினஸை ஆரம்பிச்சோம். இந்த இடத்தை வாடகைக்கு எடுத்தோம். மூலப்பொருள் வாங்குறது, ஊறுகாய் தயாரிக்கிறது, பேக்கிங் பண்றது, விற்பனைக்கு எடுத்துட்டுப் போறதுனு எங்களோட வேலைகளைப் பகிர்ந்துகிட்டோம். ஆரம்பத்துல சின்ன கடைகளுக்கு விற்பனைக்கு கொடுத்துட்*



• ஸ்ரீதேவி



• ராதிகா



டிருந்தோம். அப்புறம் தமிழ்நாடு முழுக்க மகளிர் சுய உதவிக்குழுக்களுக்காக வைக்கிற இலவச ஸ்டால்கள்லயும் எங்கப் பொருள்களை விற்க ஆரம்பிச்சோம். மாங்காய், எலுமிச்சை, தக்காளி ஊறுகாய் வகைகளை எல்லாரும் பண்றாங்க. இதெல்லாம் சீசன்ல மட்டும்தான் விலை குறைவா கிடைக்கும். நாங்க வாழைப்பூ, பிரண்டை, கறிவேப்பிலை ஊறுகாய்னு எல்லா சீசன்லயும் மலிவா கிடைக்குற பொருள்கள்ல ஊறுகாய் தயாரிக்கிறோம்.

மூலப்பொருள்களை எங்க ஏரியா விவசாயிகள்கிட்ட இருந்தே நேரடியா வாங்குறதால கம்மியான விலைக்கு கிடைக்குது. எங்க ஊறுகாய்களோட டேஸ்ட் பிடிச்ச சில கஸ்டமர்கள் ரசப்பொடி, சாம்பார் பொடினு மசாலா பொடி வகைகளும் கேட்க ஆரம்பிச்சாங்க. அதையும் தயார் பண்ணி விற்பனை பண்ண ஆரம்பிச்சோம். பிசினஸை டெவலப் பண்ணலாம்னு அரசாங்கத்துலேருந்து 50,000 ரூபாய் கடன் வாங்கினோம். எங்க பிராண்டுக்குனு லோகோ, பேக்கிங் பாக்ஸ் எல்லாம் தயார் பண்ணி களம் இறங்கியிருக்கோம். அகலக்கால் வைக்கக்கூடாதுன்னு இப்பவும் ஊறுகாய் வகைகளை பத்து, பத்து கிலோவாதான் தயார் பண்றோம். அது வித்த பிறகுதான் அடுத்த பேட்ச் தயார் பண்றோம். இப்போ மாசம் 150 கிலோ ஊறுகாயும், இருபது கிலோ மசாலா பொடிகளும் தயாரிக்கிறோம். மாசம் அதிகபட்சம் ஒன்றரை லட்சம் டர்ன் ஓவர் பண்றோம். பிசினஸ் ஆரம்பிக்க படிப்பு தடையில்லைன்னு நிரூபிச்சிருக்கோம். கனவும், உழைப்பும் இருந்தா வாழ்க்கையில அடுத்தடுத்த கட்டங்களுக்கு உயரலாம்ங்கிறதுக்கு நாங்களே உதாரணம்" என்று உற்சாகமாக விடைபெறுகிறார்கள் ஊறுகாய் தொழிலதிபர்கள்.

நன்றி! அவள் விகடன்
13:02:2024

# சிறுதானிய உணவு பொருட்கள் தயாரிப்பில் சக்தி மகளிர் சுய உதவிக் குழு வெற்றிப் பயணம்

நாமக்கல் மாவட்டம், இராசிபுரம் வட்டாரம், நாமகிரிப்பேட்டை ஒன்றியம், மங்களபுரம் ஊராட்சி, நாகப்பட்டிணம் குக்கிராமத்தில் செயல்படும் சக்தி மகளிர் சுய உதவிக் குழுவின் வெற்றி குறித்து அதன் உறுப்பினர்கள் கூறுவதைக் கேட்போம் வாருங்கள்.

“எங்களது சுய உதவிக் குழு 2009ம் ஆண்டு 12 உறுப்பினர்களை கொண்டு ஆரம்பிக்கப்பட்டது. குழுவில் சேமிப்பு செலுத்தி அதன் மூலம் சிறுகடன், கூட்டமைப்பு கடன் மற்றும் வங்கி கடன் ஆகியவற்றை வாங்கி முறையாக திருப்பி செலுத்துகிறோம். சிறுதானியங்களைக் கொண்டு உணவு பொருட்கள் தயாரித்து விற்பனை செய்யலாம் என்று குழுவின் அனைத்து உறுப்பினர்களும் கலந்து பேசி 2014ல் சிறுதானிய தின்பண்டங்கள் தயாரிக்கும் தொழிலை ஆரம்பித்தோம்.

தொடக்கத்தில் கை குத்தல் முறையில் வேர்கடலை, எள், கம்பு, ராகி போன்ற பொருட்களை பண்படுத்தி, விறகு அடுப்பு மூலம் பொருட்களை வறுத்து எடுத்தல், பாகு காய்ச்சுதல் போன்றவற்றை செய்து, இயந்திரம் பயன்படுத்தாமல், சிறுதானிய நவதானிய பயிறு வகை உருண்டைகள், சத்துமாவு போன்றவற்றை குறைந்த அளவிலேயே தயாரித்து உள்ளூர் மற்றும் 10 கிலோ மீட்டர் சுற்றளவில் உள்ள ஊர்களில் விற்பனை செய்து வந்தோம். பிறகு வட்டார அளவிலும் மாவட்ட அளவிலும் விற்பனை செய்வதற்கு ஏற்ப அதிக அளவில் பொருட்களை உற்பத்தி செய்தோம்.

குழு மூலம் உள்கடன் ரூ. 75,000/- அமுதசுரபி கடன் ரூ. 1,65,000/- வங்கி கடன் ரூ. 50,000/- பெற்று, சத்துமாவு வகைகள், சிறுதானிய இனிப்பு கார வகைகள், எள் உருண்டை, வேர்கடலை உருண்டை, நவதானிய உருண்டை, ராகி, திணை, சாமை, மாப்பிள்ளைசம்பா, குதிரைவாலி அரிசி ஆகியவற்றில் முறுக்கு, மிக்சர் போன்ற தின்பண்டங்களை தயாரித்து விற்பனை செய்து வருகிறோம். எங்கள் தொழிலுக்குத் தேவையான மூலப் பொருட்களை, உள்ளூர் விவசாயிகள் மற்றும் உழவர் உற்பத்தியாளர் நிறுவனங்கள் மூலமாக வாங்குகின்றோம்.

இத்தொழில் மூலம் எங்களுக்கு மாதந்தோறும் கணிசமான வருவாய் கிடைக்கிறது. மற்ற குழு உறுப்பினர்களுக்கும் பயிற்சி அளித்து வேலை வாய்ப்பு வழங்குகிறோம். மேலும் மரபு சார்ந்த உணவு பொருட்களின் பயன்களை மக்களிடம் கொண்டு செல்ல விழிப்புணர்வு ஏற்படுத்துதல், எங்கள் ஊரில் செயல்படும் அரசு பள்ளி குழந்தைகளுக்கு இலவசமாகவும் உற்பத்தி விலையிலேயும் உணவு பொருட்களை வழங்குகிறோம்.

சென்னை மற்றும் நாமக்கல் சுற்று வட்டாரப் பகுதிகளில் நடைபெறும் கண்காட்சிகளில் கலந்து கொண்டு, ஊட்டசத்து மிகுந்த உணவு பொருட்களை விற்பனை செய்கிறோம். இயந்திரங்கள் பயன்படுத்தாமல் இரசாயன பொருட்கள் எதுவும் சேர்க்காமல் இயற்கையான உணவு பொருட்களை கொண்டு ஊட்டச்சத்து நிறைந்த உணவு பொருட்களை தயாரிக்கின்றோம்.

இந்த தொழில் வாய்ப்பினை ஏற்படுத்தி கொடுத்த தமிழ்நாடு மாநில ஊரக வாழ்வாதார இயக்கத்திற்கு நன்றியினை தெரிவித்துக் கொள்கிறோம்” என்று மகிழ்ச்சியுடன் கூறுகின்றனர் சக்தி மகளிர் சுய உதவிக் குழுவின் உறுப்பினர்கள்.



## சட்டம் என்ன சொல்கிறது?



# வரதட்சணை தடை சட்டம் 1961

பெண்கள் பல துறைகளில் முன்னேறினாலும், ஆணுக்கு இணையாக தங்களது திறமைகளை வெளிப்படுத்தி வந்தாலும், பெண்களுக்கு வரதட்சணை கொடுமை இன்னும் ஒரு சில இடங்களில் நிகழ்ந்து கொண்டு தான் இருக்கின்றன. இதுபோன்ற கொடுமைகளைத் தடுக்கத்தான் இந்திய அரசு வரதட்சணை தடுப்பு சட்டம் எனும் ஒரு சட்டத்தை 1961 ஆம் ஆண்டு கொண்டு வந்தது. வரதட்சணை கொடுமையால் மாப்பிள்ளை வீட்டாரிடம் சிக்கித் தவிக்கும் பெண் வீட்டாருக்காக இயற்றப்பட்ட சட்டம் தான் இந்த சட்டம்.

### யாரெல்லாம் குற்றவாளிகள் ?

இந்த சட்டத்தை பொறுத்தவரை வரதட்சணை வாங்குபவர் மட்டும் அல்ல, வரதட்சணை கொடுப்பவரும் குற்றவாளி தான். அதேபோல வரதட்சணை வாங்க தூண்டுபவர் மற்றும் கொடுக்க தூண்டுபவரும் குற்றவாளியே. நேரடியாகவோ, மறைமுகமாகவோ வரதட்சணை வாங்கினாலும், கொடுத்தாலும் அவர்களுக்கு 15,000/- ரூபாய் அல்லது அந்த வரதட்சணை மதிப்பின் தொகை, இதில் எது அதிகமோ அந்த அளவு அபராதத்துடன் சேர்த்து, 5 ஆண்டுகளுக்குக் குறையாத சிறைத் தண்டனையும் கிடைக்கும்.

மணப்பெண் அல்லது மணமகனின் பெற்றோர், அல்லது பிற உறவினர்கள் அல்லது காப்பாளரிடம், நேரடியாகவோ அல்லது மறைமுகமாகவோ வரதட்சணை கேட்பது, 10,000/- ரூபாய் வரையிலான அபராதத்துடன், 2 வருடங்கள் வரை நீட்டிக்கக் கூடிய 6 மாதங்களுக்குக் குறையாத சிறைத் தண்டனை விதிக்கக் கூடிய குற்றமாகும்.

மகன் அல்லது மகள் அல்லது எந்த ஒரு உறவினரின் திருமணத்துக்காக, சொத்து அல்லது பணம் அல்லது இரண்டிலும் பங்கு தருவதாக அல்லது வியாபாரத்தில் பங்கு தருவதாக, அல்லது வேறு வகையில் தருவதாக விளம்பரத்தின் மூலமாக அளிக்கப்படும் சலுகைகள், 15,000/- ரூபாய் வரையிலான அபாராதத்துடன், 5 வருடங்கள் வரை நீட்டிக்கக் கூடிய 6 மாதங்களுக்குக் குறையாத சிறைத் தண்டனை விதிக்கக் கூடிய தண்டனைக்குரிய குற்றமாகும்.

வரதட்சணை தடுப்பு சட்டத்தின் கீழ், பிடியாணை (வாரண்ட்) இல்லாமல் சம்பந்தப்பட்டவரை கைது செய்ய முடியும். இவர்களுக்கு பெயில் கிடைக்காது. இவர்கள் மீது குற்றம் சுமத்தியவர் நினைத்தால் கூட மறுபடியும் வழக்கை வாபஸ் வாங்க முடியாது. சம்பந்தப்பட்ட குற்றவாளிகளை நீதிபதி முன் ஆஜர் படுத்தி அவர்கள் மீது எந்த குற்றமும் இல்லை என்று ஆதாரத்துடன் நிரூபித்தால் மட்டுமே இவர்கள் வெளியே வர முடியும்.

### வரதட்சணை இறப்பு சட்டம்

ஒரு பெண் திருமணமாகி 7 வருடங்களுக்குள் உடல் காயத்துடன் அல்லது தீக்காயங்களுடன் அல்லது சந்தேகத்திற்கு இடமளிக்கும் வகையில் இறந்து இருந்தால், அது வரதட்சணை இறப்பாக கருதப்படும். இதில் சம்பந்தப்பட்ட மாப்பிள்ளை வீட்டார் கைது செய்யப்பட்டு சிறையில் அடைக்கப்பட வேண்டும். இந்த விஷயத்தில் பெண்ணுக்கு வரதட்சணையாக கொடுத்த அனைத்தையும் பெண் வீட்டாரிடம் ஒப்படைக்க வேண்டும். இதில் தொடர்புடையவர்களுக்கு 7 ஆண்டு முதல் ஆயுள் காலம் வரை சிறை தண்டனை வழங்கப்படும்.

### இந்த சட்டம் பலம் பெற்றது எப்போது ?

1983 ஆம் ஆண்டு இதில் சில திருத்தங்கள் செய்து மேலும் வலுவூட்டப்பட்ட பிறகு, வரதட்சணை கொடுமை கொஞ்சம் குறையத் தொடங்கியது. குறிப்பாக தமிழகத்தில் சிலிண்டர் வெடிப்பு மூலமாக மருமகள் இறப்பது தொடர்கதையாக இருந்த காலமெல்லாம் இந்த சட்டத்தின் கடுமையான பிடியால் குறைந்தது என்றும் சொல்லலாம். அதேசமயம், வரதட்சணை வாங்கும்/கொடுக்கும் பழக்கம் இன்னும் குறைந்தபாடில்லை. கல்வியறிவு வந்துவிட்டதாக சொல்லிக் கொள்வோரும் கூட இதன் அவலத்தை உணர்ந்து கொண்டதாகத் தெரியவில்லை.

# வாழ்வை வளமாக்கிய இயக்கம்

என் பெயர் புனிதா மேரி. நான் புதுக்கோட்டை நகராட்சி, சின்னப்பா நகா ல் செயல்பட்டு வரும் ஆரோக்கிய மாதா மகளிர் சுய உதவிக் குழுவில் கடந்த 2017 முதல் உறுப்பினராக இணைந்து செயல்பட்டு வருகிறேன். சுழற்சி முறையில் 2022 முதல் குழுவின் தலைவியாக செயல்பட்டு வருகிறேன்.

நான், எனது கணவருடன் இணைந்து 2011 முதல் தேன் நெல்லி தயார் செய்து விற்பனை செய்து வருகிறேன். தேன் நெல்லி தயார் செய்தல், பதப்படுத்துதல் மற்றும் பைகள், பாட்டில்களில் அடைத்து விற்பனை செய்தல் ஆகியவை தொடர்பாக மதுரையில் பயிற்சி பெற்றேன்.

குழுவில் உள்கடனாக ரூ.20,000/- பெற்று அதனை முழுமையாக திரும்ப செலுத்தியுள்ளதுடன், வங்கிக் கடன் இணைப்பின் மூலம் ரூ.70,000/- வரை கடன் பெற்று எனது தொழிலை மேம்படுத்தியுள்ளேன். PMFME திட்டத்தின் மூலம் ரூ.40,000/- கடன் பெற்று அதனையும் முறையாக திரும்ப செலுத்தி வருகிறேன்.

நகர்ப்புர வாழ்வாதார இயக்கத்தின் வழிகாட்டுதலின்படி இணையதளத்தில் பதிவு செய்து உணவுப் பொருட்கள் தயார் செய்து விற்பனை செய்வதற்கான FSSAI சான்றிதழ் பெற்றுள்ளேன். மேலும், தேன் மற்றும் தேன்நெல்லி ஆகியவற்றை பாலிதீன் பை முதல் பெரிய பாட்டில்கள் வரை அடைத்து Vibis Natural Foods என்ற பெயரில் விற்பனை செய்து வருகிறேன். நான் தயாரிக்கும் பொருட்கள் தரமாக இருப்பதால் வாடிக்கையாளர்களின் தேவைக்கேற்ப அதிகளவில் தயார் செய்து வெளி மாவட்டங்களுக்கும் விற்பனை செய்து வருகிறேன். இதன் மூலம் ஒவ்வொரு மாதமும் ரூ.40,000/- வரை எனக்கு வருமானம் கிடைக்கிறது. மேலும், மகளிர் சுய உதவிக் குழுக்கள் தயாரிப்புப் பொருட்களின் கண்காட்சிகள் மற்றும் அனைத்து அரசு நிகழ்ச்சிகளிலும் நான் தயாரிக்கும் பொருட்களை விற்பனை செய்து வருகிறேன்.

எனக்கு கடனுதவி வழங்கி, எனது தொழில் சிறப்பாக நடைபெற வழிகாட்டிய தமிழ்நாடு நகர்ப்புர வாழ்வாதார இயக்கத்திற்கு எனது மனமார்ந்த நன்றிகளைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

**புனிதா மேரி,**
ஆரோக்கிய மாதா மகளிர் சுய உதவிக் குழு,
சின்னப்பா நகர், புதுக்கோட்டை நகராட்சி.



## கடின உழைப்பிற்கு வெற்றி நிச்சயம்...

நாகப்பட்டினம் நகராட்சி, வார்டு எண் 21-ல் வசித்து வரும் 13 பெண்கள் இணைந்து தமிழ்நாடு நகர்ப்புர வாழ்வாதார இயக்கத்தின் வழிகாட்டுதலில் மரிக்கொழுந்து என்ற பெயரில் மகளிர் குழுவினை துவங்கி நடத்தி வருகின்றனர். இந்த குழுவில் உறுப்பினர்களாக உள்ள கலையரசி, அல்லிக்கொடி, செல்வி, கற்பகம், சத்யா, யோகேஸ்வரி, பவிதா மற்றும் ராணி ஆகிய 8 பெண்கள் தங்களின் பாரம்பரிய தொழிலான மிக்சர், பக்கோடா, கார பட்டாணி, பொரித்த கடலை, வற்றல், காராச்சேவு மற்றும் முறுக்கு தயாரிக்கும் தொழிலினை செய்து வருகின்றனர்.

இவர்களின் தயாரிப்புகளுக்கு தேவையான மூலப்பொருட்கள் மற்றும் பேக்கிங் செய்யும் பொருட்களை மதுரையிலிருந்து கொள்முதல் செய்து வருகின்றனர். பத்து நாட்களுக்கு ஒருமுறை தேவையான பொருட்களை மதுரையிலிருந்து வாங்கி நாள் ஒன்றுக்கு 100 கிலோ மாவு, 25 லிட்டர் எண்ணை ஆகியவற்றைப் பயன்படுத்தி மிக்சர், முறுக்கு, ஓலபக்கோடா, காரப்பட்டாணி, பொரித்த கடலை, வத்தல், காராச்சேவு போன்ற உணவு பொருட்களைத் தயாரித்து "ஈஸ்வரி விலாஸ், பவித்ரா விலாஸ், P.M.J.விலாஸ் மற்றும் C.R.P. விலாஸ்" ஆகிய பெயர்களில் விற்பனை செய்து வருகின்றனர்.

இவர்கள் தயார் செய்யும் உணவு பொருட்களுக்கு FSSAI சான்று பெற்று, சுற்று வட்டார பகுதியில் சுமார் 20 கி.மீ தொலைவிற்கு இவர்களின் குடும்ப உறுப்பினர்களே இவர்கள் தயாரிக்கும் பொருட்களை இருசக்கர வாகனங்களில் கடைகளுக்கு விநியோகம் செய்து வருகின்றனர். இவர்களின் பாரம்பரிய தொழில் அனுபவம், இவர்களின் வியாபாரத்திற்கு பேருதவியாக அமைந்துள்ளது. இவர்களின் தயாரிப்புகள் சுகாதாரமாகவும், சுவையாகவும் இருப்பதால் மக்கள் மத்தியில் நல்ல வரவேற்பை பெற்றுள்ளது.

இவர்கள் செய்து வரும் உணவு தொழிலை விரிவுபடுத்த PMFME திட்டத்தின் மூலம் ரூ.40,000/- கடன் பெற நகர்ப்புர வாழ்வாதார இயக்கத்தின் உதவியுடன் ஒவ்வொருவரும் PMFME PORTAL-லில் கடன் விண்ணப்பத்தினை சமர்ப்பித்து 2023 ஏப்ரல் மாதம் ஒருவருக்கு தலா ரூ.40,000/- வீதம் 8 நபர்களுக்கு ரூ.3,20,000/- வரை கடன் கிடைத்தது. இவர்களின் தொழில் வளர்ச்சிக்கு இந்த கடன் தொகை பேருதவியாக அமைந்துள்ளது. குடும்ப உறுப்பினர்களையும் தொழிலில் ஈடுபடுத்தி நாள் ஒன்றுக்கு செலவு தொகை போக ஒவ்வொரு உறுப்பினருக்கும் ரூ.800/- வரை வருமானம் கிடைத்து வருகிறது.

இவர்கள் மேற்கொண்டு வரும் தொழிலை ஆய்வு செய்த நகர்ப்புர வாழ்வாதார இயக்கத்தின் அலுவலர்கள், தொழிலை விரிவுபடுத்தத் தேவையான அனைத்து உதவிகளையும் தமிழ்நாடு நகர்ப்புர வாழ்வாதார இயக்கம் செய்து கொடுக்க தயாராக உள்ளதாக தெரிவித்துள்ளார்கள்.



# நீங்கிய வறுமை... பெருகிய வளமை...

எனது பெயர் மகேஸ்வரி. நான் இராமநாதபுரம் மாவட்டம், கமுதி பேரூராட்சிக்குட்பட்ட வடக்கு முதுகுளத்தூரில் வசித்து வருகிறேன். எனது கணவர் கூலிக்கு காரம் மற்றும் ஸ்வீட் தயாரிக்கும் கடையில் வேலை பார்த்து வந்தார். எங்களுக்கு ஒரு பெண் குழந்தை உள்ளது. என் கணவரின் வருமானம் எங்களது குடும்ப தேவைக்கு போதுமான அளவு இல்லாததால், நானும் ஒரு வேலை பார்க்கலாம் என்று முடிவு செய்து வேலை தேடி சென்றேன். பத்தாம் வரை படித்துள்ள எனக்கு பேன்ஸி ஸ்டோரில் 6000/- ரூபாய் மாத சம்பளத்தில் வேலை கிடைத்தது. அந்தக் கடையில் ஆறு மாதகாலம் வேலை பார்த்தேன். காலை 9.00 மணி முதல் இரவு 9.00 மணி வரை வேலை பார்க்க வேண்டி இருந்ததால் எனது குடும்பத்தை சரிவர கவனிக்க முடியாமல் போனது. குழந்தைக்கும் உடல்நிலை சரியில்லாமல் போனது. அதன் காரணமாக வேலையை விட்டு நின்று, சுயதொழில் செய்யலாம் என முடிவு செய்தேன்.

எங்களது பகுதியில் தமிழ்நாடு நகர்ப்புர வாழ்வாதார இயக்கத்தின் வழிகாட்டுதலில் மகளிர் குழுக்கள் அமைப்பதாக கேள்விப்பட்ட நான், மகளிர் குழுவில் சேரலாம் என முடிவு செய்து, கமுதி பேரூராட்சியில் உள்ள சமுதாய அமைப்பாளரிடம் குழுக்கள் அமைப்பது குறித்து பேசினேன். அவர்கள் 12 நபர்களை இணைத்து மகளிர் குழுக்களை அமைக்கலாம் என்று கூறினார். அதனடிப்படையில் கயல் என்ற பெயரில் மகளிர் சுய உதவிக் குழுவினை அமைத்து அதன் செயலாளராக உள்ளேன். எங்களது சுய உதவிக் குழுவை மீரா பகுதி அளவிலான கூட்டமைப்புடன் இணைத்தோம். மீரா பகுதி அளவிலான கூட்டமைப்பிற்கு ஆதார நிதியாக ரூ.50,000/- வழங்கப்பட்டது. எங்கள் கூட்டமைப்பிற்கு புதிய தொழில் தொடங்க தொழில் கடனாக 4 இலட்சம் ரூபாய் RDCC வங்கி மூலம் வழங்கப்பட்டது.

என் கணவரின் துணையுடன் காரம் மற்றும் ஸ்வீட் தயார் செய்து சொந்தமாக தொழில் செய்ய முடிவு செய்த நான், தொழிலை தொடங்குவதற்கு தேவையான மூலப்பொருட்களை வாங்குவதற்காக எங்கள் சுய உதவிக் குழு மற்றும் மீரா பகுதி அளவிலான கூட்டமைப்பிடம் விண்ணப்பம் கொடுத்தேன். எனது விண்ணப்பம் ஏற்றுக் கொள்ளப்பட்டு குழுவின் உள்கடனாக ரூ. 40,000/-மும், மீரா பகுதி அளவிலான கூட்டமைப்பு மூலம் ரூ. 30,000/-மும் என மொத்தம் ரூ.70,000/- எனக்கு வழங்கப்பட்டது.

இந்தத் தொகையைக் கொண்டு, காரம் மற்றும் ஸ்வீட் செய்வதற்கு தேவையான பாத்திரங்கள், மாவு, எண்ணெய் போன்றவற்றை வாங்கினேன். எங்களது தெருவில் உள்ள முத்துமாரியம்மன் கோவில் அருகில் கடையை வாடகைக்கு எடுத்து, நாங்கள் உற்பத்தி செய்த கார சேவு, மிக்சர், பக்கோடா, சீனி முறுக்கு மற்றும் லட்டு போன்ற திண்பண்டங்களை குழு உறுப்பினர்களைக் கொண்டே விற்பனை செய்து, ஒரு நாளைக்கு குறைந்தபட்சம் ரூ. 1000/- முதல் ரூ.1500/- வரை வருவாய் பெற்று வருகிறேன். தற்போது எனது குடும்பத்தின் வறுமை நீங்கி வருகிறது. எனது குழந்தையை நல்ல முறையில் படிக்க வைக்கிறேன்.

எனது வறுமையை நீக்கி பொருளாதார வளர்ச்சி அடைவதற்கு வழிவகை செய்த தமிழ்நாடு நகர்ப்புர வாழ்வாதார இயக்கத்திற்கும், அதன் அலுவலர்களுக்கும், கயல் மகளிர் சுய உதவிக் குழு உறுப்பினர்கள் மற்றும் மீரா பகுதி அளவிலான கூட்டமைப்பு ஆகியவற்றிற்கு எனது மனமார்ந்த நன்றிகளைத் தொ வித்துக் கொள்கிறேன்.

**மகேஸ்வரி**
கயல் மகளிர் சுய உதவிக் குழு,
வடக்கு முதுகுளத்தூர், கமுதி பேரூராட்சி,
இராமநாதபுரம் மாவட்டம்.



சுய உதவிக் குழுக்களின்
செயல்பாடுகளை அறிந்திட
**முற்றம் படியுங்கள்!**

முற்றம் மேலும் மேலும்
வளர்ந்திட உங்களின்
**ஆதரவை
தாருங்கள்!**




முற்றத்திற்கு சந்தா
**செலுத்திடுங்கள்!**

புத்தகத்தைப் படிக்க என்னை
**Scan செய்யவும்**

| முற்றம் இதழின் சந்தா விபரம் | |
|---|---|
| ஒரு ஆண்டு | ரூ. 240/- |
| இரண்டு ஆண்டு | ரூ. 450/- |
| மூன்று ஆண்டு | ரூ. 680/- |

| விளம்பரக் கட்டணம் | |
|---|---|
| அட்டையின் 2-வது பக்கம் | ரூ. 50,000/- |
| அட்டையின் 3-வது பக்கம் | ரூ. 50,000/- |
| அட்டையின் பின்பக்கம் | ரூ. 50,000/- |
| புத்தகத்தின் உள்பக்கம் | ரூ. 35,000/- |

முற்றத்திற்கு செலுத்தும் சந்தாத் தொகையினை முற்றம் (MUTRAM) என்ற பெயரில் சென்னையில் மாற்றத் தகுந்த வகையில் வங்கி வரைவோலையாக எடுத்து அனுப்பவும். வரைவோலையுடன் உங்கள் பெயர், குழுவின் பெயர், கதவு எண், தெருவின் பெயர், ஊராட்சியின் பெயர், தாலுக்கா, மாவட்டம் மற்றும் அஞ்சலக எண் ஆகியவற்றை அவசியம் குறிப்பிட்டு அனுப்பவும்.

**வாசகர்கள் முற்றம் இதழ் குறித்த உங்களின் விமர்சனங்களை உங்கள் குழுவின் அஞ்சல் முகவரி மற்றும் புகைப்படத்துடன் முற்றம் இதழிற்கு அனுப்பலாம். சிறந்த விமர்சனங்கள் புகைப்படத்துடன் பிரசுரிக்கப்படும்.**

விமர்சனங்கள் அனுப்பப்பட வேண்டிய முகவரி

**முற்றம் மாத இதழ், தமிழ்நாடு மகளிர் மேம்பாட்டு நிறுவனம்,**

அன்னை தெரசா மகளிர் வளாகம், 1வது மாடி, வள்ளுவர் கோட்டம் நெடுஞ்சாலை,
நுங்கம்பாக்கம், சென்னை – 600 034.

# நாலு பேருக்கு வேலை தரும், நானும் ஒரு நல்ல நிறுவனர்!

கோயம்புத்தூர் மாவட்டம், காரமடை வட்டாரம், மூடுதுறை ஊராட்சியில் வசித்து வரும் என் பெயர் கல்பனா, நான் 12ஆம் வகுப்பு படித்துள்ளேன். எனது கணவர் விசைத்தறி (Power Loom)-ல் வேலை செய்து வருகிறார். எனது குடும்பம் நடுத்தர வருமானம் ஈட்டும் குடும்பம். எனது கனவர் மட்டும் வேலை செய்து வருவாய் ஈட்டி வந்தார். நான் எங்கள் பகுதியில் செயல்படும் காளியம்மன் மகளிர் சுய உதவிக் குழுவில் உறுப்பினராக உள்ளேன்.

எனது கணவரின் சகோதரர் திருப்பூரில் சொந்தமாக தரை விரிப்பான் (Floor Mat) தயாரித்து விற்பனை செய்து வருகிறார். அந்தத் தொழில் குறித்து ஆராய்ந்த போது அதில் நிறைய தொழில் வாய்ப்புகள் உள்ளதை அறிந்தேன். எனவே அந்தத் தொழிலை செய்ய எனக்கு ஈடுபாடு ஏற்பட்டதால், நான் ஊருக்குச் செல்லும் போது தரை விரிப்பான் தயாரிப்பது குறித்துக் கற்றுக் கொண்டேன். நானும் அவ்வப்போது தானாகவே அதை தயாரித்து பார்த்து தொழிலின் நுணுக்கங்களைக் கற்றுக் கொண்டேன். எனது குடும்ப வருமானம் போதுமானதாக இல்லாததால் நான் தரை விரிப்பான் தயாரிப்பு தொழிலை தனியாக தொடங்குவதற்கு முடிவு செய்தேன். எனது கணவரின் சகோதரர் ஏற்கனவே அந்தத் தொழில் செய்து வருவதால் தரைவிரிப்பான் உற்பத்தி மற்றும் விற்பனைத் தொடர்பான அனைத்து விவரங்களையும் கேட்டுத் தெரிந்து கொண்டேன். பலரிடம் ஆலோசனைகளைக் கேட்டுப் பெற்றேன். உற்பத்தி, சந்தைப்படுத்துதல் மற்றும் தொழிலை விரிவுபடுத்துதல் குறித்தும் தெரிந்துக் கொண்டேன்.

இந்த சூழலில், வாழ்ந்து காட்டுவோம் திட்டம் குறித்து எங்கள் சுய உதவிக் குழுவின் மூலமாக தெரிந்து கொண்டேன். அவர்களை அணுகிய போது, இணை மானிய நிதியாக வங்கிக் கடன் பெற தேவையான அனைத்து வழிகாட்டுதல்களையும் தந்தார்கள். அவர்களின் உதவியுடன் ரூ. 3,00,000/- இணை மானிய நிதிக்கடன் பெற்று தரை விரிப்பான் தயாரிக்கும் இயந்திரம் மற்றும் மூலப்பொருட்களை வாங்கி தரை விரிப்பான் தயாரிக்கும் தொழிலை தொடங்கினேன். என்னுடன் சேர்த்து 4 பேர் வேலை செய்கிறோம். பணியாளர்களின் ஊதியம் மற்றும் நிர்வாக செலவுகள் போக மாதம் எனக்கு 20,000/- ரூபாய்க்கும் மேல் இலாபம் கிடைக்கிறது. நாங்கள் தயாரிக்கும் தரை விரிப்பான் தரமானதாக உள்ளதால் அதிக அளவில் வியாபார ஆணைகள் கிடைக்கின்றன. இந்த வளர்ச்சி எனக்கு மனநிறைவை கொடுத்துள்ளது.

நான் ஒரு தொழில் முனைவோராக சாதிப்பேன் என்று கனவில் கூட நினைத்தது இல்லை. ஆனால், எனக்கென ஒரு நிறுவனத்தை உருவாக்கி, அதில் மூன்று பேருக்கும் வேலை கொடுத்து, நிலையாக உற்பத்திச் செய்து வணிகத்திலும் மேம்பட பக்கபலமாக இருந்த வாழ்ந்து காட்டுவோம் திட்டத்திற்கும், திட்டத்தின் அலுவலர்களுக்கும் எனது மனமார்ந்த நன்றியினைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

**எஸ். கல்பனா,**
காளியம்மன் மகளிர் சுய உதவிக்குழு,
மூடுதுறை ஊராட்சி, காரமடை வட்டாரம்,
கோயம்புத்தூர் மாவட்டம்.



## சுவை மிகுந்த வளர்ச்சி, ஊறுகாய் தொழிலில் வளர்கிறது!

எனது பெயர் எஸ்.கோமதி, திருவாரூர் மாவட்டம், முத்துப்பேட்டை வட்டாரத்தில் உள்ள உதயமார்த்தாண்டபுரம் ஊராட்சியில் வசித்து வரும் நான், எங்கள் பகுதியில் செயல்பட்டு வரும் பெரியநாயகி மகளிர் சுய உதவிக் குழுவில் கடந்த 5 வருடங்களாக உறுப்பினராக உள்ளேன். எங்கள் ஊரில் உள்ள பெண்கள் தனித்தனியாக சிறுசிறு வேலைகளைச்செய்துவந்தோம்.அந்ததருணத்தில் வாழ்ந்து காட்டுவோம் திட்டம் மூலமாக எங்களுக்கு திட்டத்தின் மூலமாக கிடைக்கும் பயன்கள் குறித்த தகவல் கொடுத்தனர். எங்கள் குழுவின் கூட்டத்தை நடத்தி, தொழிற்குழு அமைப்பது குறித்தும் அதன் பயன்பாடுகள் குறித்தும் எடுத்துரைத்தனர்.

கூட்டத்தில் விவாதித்தபடி 35 மகளிர் சுய உதவிக் குழு பெண்களுக்கு ஊறுகாய், அப்பளம், மசாலாப்பொடி தயாரித்தல் ஆகிய பயிற்சிகள் வழங்கப்பட்டன. அந்தப் பயிற்சியில் சிறப்பாகப் பயின்ற 14 பெண்களை ஒன்றிணைத்து 'சுவை ஊறுகாய் தொழிற்குழு' உருவாக்கப்பட்டது.

எங்கள் குழு உறுப்பினர்களிடமிருந்து உறுப்பினர் கட்டணம் ரூ. 100/- மற்றும் ஆண்டு சந்தா கட்டணம் ரூ. 500/- என மொத்தம் ரூ. 8,400/- நிதியினைத் திரட்டி வங்கியில் நடப்பு கணக்கு ஒன்றை எங்கள் தொழிற்குழுவின் பெயரில் தொடங்கினோம். அதன் பிறகு எங்கள் குழுவுடன் கலந்து பேசி குழுவிற்கு வேண்டியவற்றை தொழில் திட்டமாக திரட்டி அதை ஒரு முன்மொழிவாக வாழ்ந்து காட்டுவோம் திட்டத்திற்கு சமர்ப்பித்தோம்.

எங்கள் தொழிற்குழுவை சிறப்பாக செயல்படுத்தவும், மூலப்பொருட்களை வாங்கிடவும் தொழில்திட்ட முன்மொழிவைவாழ்ந்துகாட்டுவோம் திட்டத்திற்கு சமர்ப்பித்தோம். அதன் அடிப்படையில் எங்கள் தொழிற்குழுவிற்கு திட்டத்தின் மூலம் ரூ. 75,000/- தொடக்க நிதி வழங்கப்பட்டது. அந்த நிதியிலிருந்து ஊறுகாய் தொழில் செய்வதற்குத் தேவையான மூலப்பொருட்கள் மற்றும் உபகரணங்களைக் கொள்முதல் செய்து, மக்களின் தேவைக்கேற்ப ரூ.5/- முதல் ரூ.50/- வரையிலான பல்வேறு ஊறுகாய் வகைகளை தரமான முறையிலும் மற்றும் சுவையான முறையிலும் தயாரித்து விற்பனைச் செய்து வருகிறோம். அதன் வழியாக நாங்கள் மாதம் ரூ. 10,000/- வரை வருவாய் ஈட்டி வருகின்றோம்.

முன்பு எங்கள் ஊரில் தொழில் வாய்ப்புக்காக காத்திருந்தோம். தற்போது நாங்கள் தொழிற்குழு தொடங்கி, நிதியுதவி பெற்று ஊறுகாய் வகைகளைத் தயாரித்து நல்ல இலாபத்தில் விற்பனைச் செய்து வருகிறோம். இதன் மூலம் எங்கள் தொழில் வளமும், வாழ்க்கைத் தரமும் வளர்ச்சியடைந்துள்ளது. எங்களுக்கு தொழில் வாய்ப்பினை ஏற்படுத்திக் கொடுத்த வாழ்ந்து காட்டுவோம் திட்டத்திற்கு எங்களின் 'சுவை ஊறுகாய் தொழிற்குழுவின்' சார்பில் நன்றிகளைத் தெரிவித்துக் கொள்கிறோம்.

**எஸ். கோமதி**
சுவை ஊறுகாய் தொழிற்குழு
உதயமார்த்தாண்டபுரம் ஊராட்சி,
முத்துப்பேட்டை வட்டாரம், திருவாரூர் மாவட்டம்.



# இணைந்து சந்தித்த சிரமங்களை, இணை மானிய நிதி போக்கியது!

என் பெயர் வினிதா (வயது 24). சேலம் மாவட்டம், தாரமங்கலம் வட்டாரம், குருக்குப்பட்டி கிராமத்தில் வசித்து வரும் நான், எனது ஏழ்மையான குடும்பத்தை முன்னேற்றம் அடையச் செய்ய வேண்டும் என்ற துடிப்புடன் தொழில் திறனைக் கொண்டு போராடிய நான், வாழ்ந்து காட்டுவோம் திட்டத்தின் மூலம் எனது குடும்பத்தின் பொருளாதாரத்தை உயர்த்தியுள்ளேன்.

எனக்கு என் வீட்டில் திருமணம் செய்து வைத்தனர். திருமணம் ஆகி ஒரு வருடம் வரை நான் சந்தித்த பொருளாதார சிக்கல்கள் கொஞ்சநஞ்சமல்ல. வீட்டில் ஒரு விசைத்தறி போட்டு, அதை என் கணவரும் நானும் ஓட்டினோம். அதன் மூலம் வந்த வருவாயில் எங்கள் குடும்பத்தை நடத்தி வந்தோம். எங்கள் வீட்டில் தறி ஓடாத நாட்களில் வறுமை மெல்ல தலைத்தூக்கும். அதை அப்படி இப்படி சமாளித்து வந்தோம். ஆனால், ஒரே வருடத்தில் எங்களுக்கு ஒரு பெண் குழந்தை பிறந்தது. அந்த குழந்தையை வளர்ப்பது குறித்தும், எங்கள் எதிர்காலம் குறித்தும் நிறைய சிந்தித்தோம். என் கணவர் விசைத்தறி ஓட்டுகிறார். நான் என் குழந்தையை வளர்த்து வருகிறேன். நான் கூடுதலாக ஏதாவது சம்பாதிக்க முடியுமா? வாழ்வில் பொருளாதார வளம் காண முடியுமா? இப்படி யோசித்த நான் உண்மையிலேயே சாதித்தேன்.

நான் எனது கிராமத்தில் உள்ள குறிஞ்சி மலர் மகளிர் சுய உதவிக் குழுவில் உறுப்பினராக இருந்தேன். எங்கள் ஊராட்சியில் உள்ள தொழில்சார் சமூக வல்லுநர் மூலம் எங்கள் குழுவின் வழியாக தொழில் விரிவாக்கத்திற்கு இணை மானிய நிதிக்கடன் (MGP) பெற முடியும் என்பதை அறிந்தேன். அதன் அடிப்படையில் இரண்டு விசைத்தறி வாங்குவதற்கு திட்ட உதவியுடன் விண்ணப்பித்தேன். என் தொழில் திட்டத்தை ஆராய்ந்த வங்கியினர் வாழ்ந்து காட்டுவோம் திட்டத்தின் 30 மானியத்துடன் கூடிய இணை மானிய நிதிக்கடனாக ரூ. 5 இலட்சத்தை பாரத ஸ்டேட் வங்கியின் வாயிலாக பெற்றுத் தந்தனர்.

அந்தத் தொகையைக் கொண்டு இரண்டு புதிய விசைத்தறிகளை வாங்கி ஓட்டி வருகிறோம். எங்களுடைய வருமானம் இப்போது 3 மடங்காக உயர்ந்துள்ளது. நான் கண்ட கனவு இப்போது மெய்யாக ஆனது. நான் எனது விடியலைக் கண்டேன். எனது குடும்ப வளர்ச்சிக்கு உண்மையான உதவிகளையும், வழிகாட்டுதல்களையும் வழங்கிய வாழ்ந்து காட்டுவோம் திட்டத்திற்கு நன்றி!

**வினிதா,**
குறிஞ்சி மலர் மகளிர் சுய உதவிக் குழு,
குருக்குப்பட்டி ஊராட்சி, தாரமங்கலம் வட்டாரம்,
சேலம் மாவட்டம்.



PRESS & REGISTRATION OF BOOKS ACT
Registration of News papers (Control) Rules 1956
FORM IV (SEE RULE 8) Statement about ownership Particulars of
**TAMILNADU MAKLIR MAMPATTU MURTRAM**

| | |
|---|---|
| 1. Place of Publication | **MUTRAM SOCIETY**<br>Tamil Nadu Corporation for Development of Women Ltd,<br>Annai Teresa Mahalir Valagam, Valluvarkottam High Road, Nungambakkam, Chennai – 600 034 |
| 2. Periodicity of its publication | **Monthly** |
| 3. Printer's Name | **B. RAJKUMAR,** |
| Nationality | Indian |
| Full Address | RASI GRAPHICS PRIVATE Ltd, 40, Peters Road, Royapettah, Chennai – 600 014. |
| 4. Publisher's Name | **S.CHINNAPPAN.** |
| Nationality | Indian |
| Full Address | Tamil Nadu Corporation for Development of Women Ltd,<br>Annai Teresa Mahalir Valagam, Valluvarkottam High Road, Nungambakkam, Chennai – 600 034 |
| 6. Owner's Name | **MUTRAM SOCIETY - S.CHINNAPPAN.**<br>Representated by its Secretary |

I, **S.CHINNAPPAN**, hereby that the particulars given adove are true to the best of my knowledge.

Chennai: 600 034.

Date: 27–02–2023.

**(S.CHINNAPPAN)**
Signature Publisher

DDU-GKY
Deen Dayal Upadhyaya Grameen Kaushalya Yojana
Empowering India • Powering the World

## மகளிர் வாழ்வாதாரம் தொடர்பான

# வாய்ப்புகள், நலத்திட்டங்கள், நிதி உதவிகள்

**மற்றும் ஊரக நகர்ப்புர இளைஞர்களுக்கான திறன்
பயிற்சிகள் குறித்த வழிகாட்டுதல்கள் பெறவும்,
தமிழ்நாடு மகளிர் மேம்பாட்டு நிறுவனத்தின் கீழ்
செயல்படும் திட்டங்கள் குறித்து ஆலோசனைகள் மற்றும் புகார்கள்
தெரிவிக்கவும் கீழ்கண்ட தொலைபேசி எண்ணை அழைக்கவும்.**

**வாழ்வாதார உதவி அழைப்பு எண்**

# 155 330

**LIVELIHOOD HELPLINE NUMBER**

அனைத்து வேலை நாட்களிலும், காலை 09.30 மணி முதல்
மாலை 06.30 மணிவரை தொடர்பு கொள்ளலாம்.



**தமிழ்நாடு மகளிர் மேம்பாட்டு நிறுவனம்**
அன்னை தெரசா மகளிர் வளாகம், வள்ளுவர் கோட்டம் நெடுஞ்சாலை,
நுங்கம்பாக்கம், சென்னை - 600 034 | 044-28173415, ugkytn2016@gmail.com

சமைப்போம்...
சுவைப்போம்...

# உரைப்பு அடை அல்லது துவரம் பருப்பு அடை

ஒருசிலர் உரைப்பு அடை என்றும் துவரம் பருப்பு அடை என்றும் கூறுவர். இந்த அடை அரிசி, துவரம் பருப்பு மற்றும் வெங்காயம் போன்ற பொருட்களை கொண்டு செய்யப்படுகிறது. இந்த அடையை சிறியவர்கள் முதல் பெரியவர்கள் வரை யார் வேண்டும் என்றாலும் சாப்பிடலாம்.

### தேவையான பொருட்கள்



இட்லி அரிசி 1 கிலோ, துவரம் பருப்பு 300 கிராம், பெரிய வெங்காயம் அல்லது சாம்பார் வெங்காயம் 3/4 கிலோ, சோம்பு 2 மேஜைக்கரண்டி, காய்ந்த குண்டு மிளகாய் 25 கிராம், தேங்காய் 1/2 மூடி, கருவேப்பிலை சிறிது, பச்சை கொத்தமல்லி சிறிது (அதிகம் சேர்த்தால் மிகவும் சுவையாக இருக்கும்), பெருங்காயம் 1 சிட்டிகை, நல்லெண்ணை, தண்ணீர் மற்றும் உப்பு தேவையான அளவு

### செய்முறை

முதலில் ஒரு பாத்திரத்தில் இட்லி அரிசியையும், மற்றொரு பாத்திரத்தில் துவரம் பருப்பையும் போட்டு தண்ணீர் ஊற்றி குறைந்தபட்சம் 5 மணி நேரம் ஊற வைக்கவும். ஐந்து மணி நேரம் கழித்து ஊற வைத்துள்ள அரிசி மற்றும் துவரம் பருப்பை தனித்தனியாக நன்றாக கழுவி வைத்துக் கொள்ளவும்.

அரிசியை வடிகட்டி கிரைண்டரில் போட்டு அத்துடன் காய்ந்த குண்டு மிளகாய், சோம்பு, உப்பு மற்றும் லேசாக தண்ணீர் தெளித்து அரைக்கவும். கரகர என்று அரைபட்டவுடன் துவரம் பருப்பை போட்டு ஒரு ரெண்டு சுத்து சுத்தியவுடன் கிரைண்டரை நிறுத்தி மாவை வழித்து எடுத்து ஒரு பாத்திரத்தில் வைக்கவும்.

வெங்காயத்தை நன்கு பொடிப்பொடியாக நறுக்கி வைத்துக் கொள்ளவும். தேங்காயை துருவி வைத்துக் கொள்ளவும். அரைத்து வைத்துள்ள மாவில் அரிந்த வெங்காயம், துருவிய தேங்காய், கருவேப்பிலை, கொத்தமல்லி மற்றும் பெருங்காயத்தூள் போன்றவற்றை சேர்த்து நன்றாக கலக்கவும். தோசை கல்லை அடுப்பில் வைக்கவும். அடுப்பின் அருகே ஒரு கிண்ணத்தில் தண்ணீர் வைத்துக் கொள்ளவும். பிறகு அடை மாவை எடுத்து இரண்டு முறை தோசைகல்லில் போட்டு கையால் வட்டமாக தட்ட வேண்டும். அடையை தட்டும் போது தண்ணீர் தொட்டு தட்ட வேண்டும். அப்பொழுதுதான் தோசைகல்லின் அனல் கையை சுடாது.

தட்டியவுடன் அடையை சுற்றி நல்லெண்ணையை ஊற்றி வேகவைக்கவும். இட்லி பானையின் மூடியை எடுத்து அடையை மூட வேண்டும். இப்படி செய்வதால் அடை சீக்கிரமாக வேகும். 4 நிமிடம் கழித்து அடையை திருப்பி போட்டு வேகவைக்கவும். மறுபடியும் அடையை சுற்றி நல்லெண்ணையை ஊற்றவும். 4 நிமிடம் கழித்து மூடியை எடுத்து பார்த்தால் நல்ல பொன்னிறமாக அடை இருக்கும். அதன் பின் அடையை எடுத்து ஒரு தட்டில் வைக்கவும். இப்படியாக மீதம் உள்ள மாவையும் அடையாக செய்யவும். இந்த அடையுடன் தேங்காய் சட்னி, சர்க்கரை மற்றும் அவியலுடன் சேர்த்து சாப்பிடலாம் இல்லை என்றால் வெறுமனே சாப்பிடலாம்.

### குறிப்பு

இந்த அடையை சூடாக சாப்பிடும் போது மிகவும் சுவையாக இருக்கும். அதுவும் தேங்காய் சட்னியுடன் சாப்பிட்டால் இன்னும் சுவையை கூடும். அடையாக சாப்பிட விருப்பம் இல்லை என்றால் தண்ணீர் ஊற்றி தோசைமாவு பதம் வரும் அளவிற்கு கலந்து தோசையாகவும் சுட்டு சாப்பிடலாம். இந்த அடை மாவு அளவு 6 பேர் சாப்பிடக் கூடியது.

Published by S. CHINNAPPAN, on behalf of MUTRAM SOCIETY from Tamilnadu Corporation for Development of Women's Ltd., Printed by B. RAJKUMAR, RASI GRAPHICS PRIVATE LTD, 40.Peters Road, Royapettah, Chennai - 600014. Published from (1,25,000 Copies Circulated) Tamilnadu Corporation for Development of Women's Ltd., Annai Teresa Mahalir Valagam, Valluvarkottam High Road, Nungambakkam, Chennai - 600 034, Editor : S. CHINNAPPAN.



# மழலைக்கும், மகளிருக்கும் அழகு சேர்க்கிறேன்...

அழகு நிலையத்தை நிறுவனமாக உயர்த்தி வளர்கிறேன்!

TNRTP திட்டத்தின் மூலம்
**ரூ.5 இலட்சம்**
இணை மானிய நிதி (MGP) பெற்று பயனடைந்துள்ளார்.



## தொழிற்திறன்

- அழகுக்கலையில் டிப்ளமோ படித்தவர்/நிறுவனர்
- 4 பெண்களுக்கு வேலை கொடுக்கிறார்
- சொந்தமாக இயற்கை முறையில் அழகு சாதனப்பொருட்களைத் தயாரிக்கிறார்
- ஆர்வமுள்ள இளம் பெண்களுக்கு அழகுக்கலை பயிற்சி அளிக்கிறார்

## அழகுநிலையத்தில் வழங்கும் சேவைகள்

- பாதங்களுக்கு சிகிச்சை (Pedicure)
- கை நகங்களை அழகுப்படுத்துதல் (Manicure)
- தலைமுடியை மென்மையாக்குதல் (Hair Smoothening)
- கூந்தலை நேராக்குதல் (Straightening)
- மணப்பெண் அலங்கரிப்பு (Bridal Makeup Services)





நிறுவனப் பெயர்: ஜெயசித்ரா
**National GlabraBeauty Care & Tailoring**
மாவட்டம்: செங்கல்பட்டு
வட்டாரம்: திருக்கழுக்குன்றம்
ஊராட்சி: புதுப்பட்டினம்

உங்கள் குடும்பத்தினரின் அழகுக்கலை தொடர்புக்கு அழைக்கவும்:
**86808 09984**

## தமிழ்நாடு ஊரகப் புத்தாக்கத் திட்டம்

ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித் துறை
5வது தளம், திருவிக தொழிற்பேட்டை, சிட்கோ தொழிற்பேட்டை, கிண்டி, சென்னை- 600032, தமிழ்நாடு
(044) 434 43200 tnrtpstate@gmail.com www.vkp-tnrtp.org VKPTNRTP VKP_TNRTP VKP_TNRTP

RNI NO .TNTAM/1999/02733 - TAMIL NADU MAKLIR MAMPATTU MURTRAM R.DIS.1569 / 2023
Reg.No. TN/CH/(C)/455/2024-2026 & Licensed to Post Under without Prepayment TN/PMG(CCR)/WPP-564 / 2024-2026
Date of Publication : 1st Week of the every month Posted between 8th – 14th March 2024 Posted at Patrika Channel, Egmore.

TNULM
TAMIL NADU URBAN LIVELIHOODS MISSION
*Empowering Lives*

# மக்களைத் தேடி மருத்துவம்




**மேலும் விவரங்களுக்கு வாழ்வாதார உதவி அழைப்பு எண் 155 330 ல் தொடர்பு கொள்ளவும்**